பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 05 வியாழக்கிழமை 21.11.2019 கதிர் 16

**இனி இது ரகசியம் அல்ல!**

இதுவரைப் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இன்றுடன் முன்னாள் பிரதமராகின்றார். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகின் றார்.

சரி, காலியாகும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பக்கம் 02

# இன்றுதான் பதவி விலகுகிறார் ரணில்!

## ஜனநாயகத்தை மதிப்பதால் கோட்டா அரசமைக்க இடமளித்துள்ளேன் என அவர் நேற்று அறிக்கை

கொழும்பு, நவ. 21

ஜனநாயகத்தை நான்விரும்புகின்றேன். அதற்கு மதிப்பளிக்கின்றேன். ஜனநாயக முறைப்படியே செயற் படுவேன். எனவே புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ புதிய அரசை அமைப்பதற்கு வாய்ப்பளித்து, பிரத மர் பதவியிலிருந்து விலகிச் செல்வதற்குத் தீர்மானித்தி ருக்கின்றேன். இதுகுறித்து நாளைய தினம் (இன்று) ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பேன் – இவ்வாறு நேற்று மாலை தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க .

பிரதமர் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவித்து நேற்று புதன்கிழமை பக்கம் 03

# சஜித் தோல்வி அடைவதற்கு கூட்டமைப்பும் ஓர் காரணம்

## மனம் திறக்கின்றார் சிறிதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 21

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் தோல்விக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற் பாடுகளும் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித் துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறி னார். பக்கம் 02



## தம்பி கோட்டா முன்னிலையில் இன்று பிரதமராகின்றார் அண்ணன் மஹிந்த!

கொழும்பு, நவ. 21

பொதுஜன பெரமுன வின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இன்று பிற் பகல் ஒரு மணிக்கு நாட் டின் பிரதமராகப் பதவி யேற்கிறார்.

அத்துடன் அவர் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பக்கம் 03

## டக்ளஸுக்கும் அமைச்சுப் பதவி

யாழ்ப்பாணம், நவ. 21

பிரதமர் மஹிந்த தலைமையில் இன்று பதவி யேற்கும் 15 பேர் கொண்ட அமைச்சரவையில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந் தாவுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

பொதுஜன பெரமுனவின் பக்கம் 03

## குடும்பத் தலைவர் கார் மோதிச் சாவு!

கொக்குவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 21

சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் ஒரு வரைப் பின்னால் பயணித்த கார் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பக்கம் 03

## அமைச்சுப் பதவியை ஒருபோதும் பெறவேமாட்டாது கூட்டமைப்பு!

### அடித்துச் சொல்கிறார் சிறிதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் பிரச்சினை கள் தீர்க்கப்படாமலிருக்கும் சூழ்நிலையில் நாங்கள் அமைச் சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளவதற் பக்கம் 03

## மஹிந்த – சீனத் தூதுவர் நேற்று முக்கிய பேச்சு



கொழும்பு, நவ. 21

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷி யூ ஹாங், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜ பக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் பக்கம் 03

## மாகாணங்களின் ஆளுநர்கள் அனைவருமே பதவி விலகல்

கொழும்பு, நவ. 21

அனைத்து மாகாணங்களின் ஆளுநர்களும் தமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலகம் பக்கம் 03

## போர்க்காலச் சிந்தனையிலேயே இப்போதும் உள்ளார் கோட்டா!

### அவர் விரைவில் மாறவேண்டும் என்கிறார் சிறிதரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 21

ஜனாதிபதியாகப் பதவியேற் றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ வின் கருத்துக்கள், செயற்பாடு கள் என்பன அவர் போர் வெற்றி யில் அல்லது போர்க்காலச் சிந் தனைகளி பக்கம் 03

## பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் தடுப்பில் உள்ளோருக்கு விடுதலை

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

எமது அரசு சட்டமா அதிபரின் ஆலோசனை யைப் பெற்ற பின்னர், பொய்யான குற்றச்சாட் டுக்கள் முன்வைத்து அல்லது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படா மல் தடுத்து வைக்கப்பட் டுள்ள பக்கம் 03

## அரச அனுசரணை வெளிநாட்டுப் பயணங்களை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டார் கோட்டாபய!

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் அறிவுறுத்தலுக்கு அமைய அரச உத்தியோகத்தர்கள் அரச அனுசரணை யுடன் வெளிநாடுகளுக்குப் பயணமா வதை இடைநிறுத்தியுள்ளதாக ஜனாதி பதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர பணித்துள்ளார்.

அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற் றும் மாகாண ஆளுநரின் செயலாளர் களுக்கு இந்தப் பக்கம் 02

# ஐ.தே.க. தலைமையில் மாற்றம் இல்லையேல் புதிய கட்சிதான்!

## இப்படிக் கூறுகின்றார் ஹரீன் பெர்னாண்டோ



கொழும்பு,நவ.21

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலும், ஏனைய பதவிகளிலும் மாற்றங்கள் நிகழவில்லையாயின் புதிதாக அரசியல் கட்சியொன்றை அமைக்க வேண்டி ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்பொழுதுள்ள கட்சியின் தலைமையில் மாற்றங்களைக் கொண்டுவராது போனால், சஜித் பிரேமதாஸச்அரசியலில் ஈடுபட தயாரில்லாது இருக்கிறார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய வங்கிக்குப் புதிய ஆளுநர்

மத்தியவங்கிக்குப்புதிய ஆளுநர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல் வட்டாரங்கள்சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி இராஜினாமாச்செய்யவுள்ளார் எனவும், அவரின் இராஜினாமாவை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் புதிய ஆளுநர் நியமிக்கப்படவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

நிதிச் சட்டங்களுக்கு ஏற்ப, மத்திய வங்கியின் ஆளுநர் ஒருவரை நியமிப்பதற்கு நிதி அமைச்சரின் சிபாரிசு அவசியமாகும். இதனால், தற்போதைய நிதி அமைச்சர் மங்கள சமரவீர இராஜினாமா செய்துள்ளமையால், புதியநிதிஅமைச்சர்நியமிக்கப்படும் வரையில் ஆளுநரை நியமிக்கக் காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யுவதியை துர்நடத்தைக்கு உட்படுத்த உதவிய குற்றச்சாட்டில் இருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணத்தில் 16 வயதுடைய இளம் யுவதியைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்த உதவி செய்தனர் என்ற குற்றச் சாட்டில் யாழ். நகரில் அமைந்துள்ள விடுதி உரிமையாளர் மற்றும் அங்கு பணியாற்றுபவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் 16 வயதுடைய இளம் யுவதி பஸ்ஸிற்காக நேற்று முன்தினம் காத்திருந்துள்ளார். அப்போது அங்கு வந்த இளைஞன் ஒருவர் அவருடன் காதல் வார்த்தைகள் பேசி யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அந்த யுவதியை துர்நடத்தைக்கு உட்படுத்திய பின் அங்கேயே விட்டுவிட்டு இளைஞன் அங்கிருந்து சென்றுள்ளார். பாதிக்கப்பட்ட யுவதி யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் உள்ள மகளிர் பொலிஸ் பிரிவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டில் தன்னை ஆசை வார்த்தைகள் கூறி விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்ற இளைஞன் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனத் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து இளம் யுவதி வழங்கிய தகவலுக்கு அமைய யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல விடுதியின் உரிமையாளரும் அங்கு பணியாற்றும் நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளம்யுவதியைதுஷ்பிரயோகம் செய்ய உதவி செய்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## சஜித் தோல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு சஜித்துக்குப் பகிரங்க ஆதரவு வழங்கியமையாலேயே அவர் தோல்வி கண்டார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்துக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – சஜித்தின் தோல்விக்கு கூட்டமைப்பின் நிலைப்பாடும் ஒரு காரணமாக இருக்கலாம். அதனை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். ஏனென்றால் நாங்கள் கடந்த காலங்களில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு இருந்தோம். அதே நேரத்தில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை அளித்தவிட்டு மேடையில் ஏறிப் பேசவில்லை.

ஆனால் இம்முறை சஜித் பிரேமதாஸவுக்காக மேடை மேடையாக ஏறி அவருக்கு வாக்களியுங்கள் என்று நாங்கள் செய்த பிரசாரம் தென்பகுதியில் வேறு விதமாகக் கொண்டு செல்லப்பட்டது. அதனால் அங்கு இனவாத ரீதியான கண்ணோட்டத்தில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன

குறிப்பாக தமிழர்கள் – சிங்களவர்களுக்கு எதிரான தேர்தல் இது என்றும் சிங்கள மக்களே கிளர்ந்தெழுங்கள் என்றும் பிரசாரம் செய்யப்பட்டது. ஆக இந்தத் தேர்தல் சஜித்தா, கோட்டாவா என்று பார்க்காமல் தமிழனா, சிங்களவனா என்று பார்க்கின்றது போலவே தெற்கில் பிரசாரம் செய்யப்பட்டது.

குறிப்பாக எமது கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் பேசிய பேச்சைக் கூட அங்குள்ள சிங்கள ஊடகங்கள் 'இந்தத் தேர்தலில் சிங்கள மக்களுக்கு ஒரு பாடத்தைப் படிப்பியுங்கள். அதற்காக சஜித்திற்கு வாக்களியுங்கள்' என்று பேசியது போலவே தோற்றப்பட்டை சிங்கள மக்களிடம் கொடுத்திருக்கின்றன.

அதனால்தான் சஜித் பிரேமதாஸவுக்கு எதிரான தோல்வியொன்று மிகக் கடுமையானதாக ஏற்பட்டிருக்கிறது. சஜித்தின் தோல்விக்கு இன்னும் பலகாரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

குறிப்பாக அவருடைய கட்சிக்குள்ளேயே பலவீனங்கள் பல இருந்திருக்கின்றன. அதிலும் அவர்சார்ந்தகட்சியின்தலைமைத்தவதற்துக்கு அவர் தேர்தல் காலத்திலே கொடுத்த நெருக்கீடுகள் பெரிய அளிவிலே அவருக்கு வாய்ப்பாக அமையவில்லை. அதே நேரம் அவரின் தலைமைத்துவமும் வெற்றிக்காக பாரிய அளவிலான பங்களிப்பைச் செய்ததா என்பதெல்லாம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அவரது கட்சிக்குள்ளேயே பல்வேறுபட்ட நெருக்கடிகள் அவருடைய அரசியல் தோல்விக்குக் காரணமாக இருக்கின்றன.

இதனை விட ஏப்ரல் 21 இல் தமிழர்கள் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் அந்த தாக்குதலின் பின்னர் அது ஒரு சிங்கள இனவாத வெற்றிக்காக இடப்பட்ட அடித்தளமாகவே தெற்கில் பார்க்கப்பட்டது. இலங்கையில் காணப்படுகின்ற பௌத்த, சிங்கள மக்களுக்கு முஸ்லீம்களால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்ற செய்திதான் வெளியில் சொல்லப்பட்டு பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் பௌத்த, சிங்களவர்கள் யாரும் அங்கு மரணத்தை தழுவவில்லை. இறந்தது முழுவதுமே தமிழ் கிறிஸ்தவர்கள்தான்.

ஆனாலும் அந்தச் சம்பவத்தின் பின்னர் இதற்கான அடித்தளமிடப்பட்டு இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு, தேசிய உணர்வு என்ற எண்ணங்களோடு கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியினர் பெரிய அரசியல் பரப்புரையை மேற்கொண்டிருந்தார்கள். இதற்குப் பின்னணிகள் பல இருக்கலாம். அதேபோல அரசியல் நடவடிக்கைகள் பல இருக்கலாம். ஆனாலும் கூட இவற்றையெல்லாம் கடந்து இந்தக் கால கட்டத்திலே அவர்கள் அரசியல் வெற்றியை பெற்றிருக்கிறார்கள்.

அவ்வாறு பெற்ற வெற்றியை அவர்கள் எல்லா இனங்களும் அதாவது இந்த நாட்டிலே வாழ்கின்ற அனைத்து தேசிய இனங்களும் அனுபவிக்கக்கூடிய வகையில் கொண்டுசெல்வது தான் ஒரு ஜனநாயகநீதியான அரசியலுக்கு பொறுப்புக்கூறக்கூடியவகையிலே அமையும்–என்றார். (ஐ-07)

## அரச அனுசரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புரை ஜனாதிபதியின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை இந்தப் பணிப்புரை நடைமுறையில் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதியின் செயலாளர், செயலாளர்கள் தமக்குக் கீழ் வரும் பணித்துறையினருக்கு இந்த பணிப்புரையை நடைமுறைப்படுத்துமாறும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணிலுக்குக் கிடைக்குமா? சட்டப்படியும் தார்மீகப்படியும் அது அவருக்குத்தான் உரியது. ஆனால் அதனை அவருக்கு வழங்கக் கூடாது என கட்சிக்குள் ஒரு தரப்பு கங்கணம் கட்டி நிற்கின்றது. வழக்கம் போல சஜித் தரப்புத் தான் அது.

ஏற்கனவே, ஜனாதிபதித் தேர்தல் படுதோல்வியை அடுத்து கட்சியின் பிரதித் தலைவர் பதவியை இராஜினாமா செய்த நபர்தான் சஜித்.

இப்போது, இதுவரை ஐக்கிய தேசிய முன்னணி அரசில் பங்காளிக் கட்சிகளாக இருந்த சில கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் வைத்துக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ரணிலுக்குக் கிடைக்காமல் செய்யும் திரைமறைவு முயற்சிகளை இத்தரப்பு ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், இந்த விடயத்தில் ரணிலை வீழத்துவது – இப்போதைக்கு வீழ்த்துவது – சஜித் அணிக்கு சாத்தியமற்றது என்றே தெரிகின்றது.

என்றாலும், ஐக்கிய தேசிய முன்னணி எம்.பிக்கள் அணியில் பெரும்பான்மையானோரின் ஆதரவு சஜித்துக்கு இருப்பதால் அவரையே எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்பது சஜித் தரப்பு எம்.பிக்களின் வாதமாகும்.

ஆனால், இவ்விவகாரத்தில் இரண்டு விடயங்கள் சஜித்துக்குப் பாதகமாக இருக்கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஒன்று – ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு. அதன்படி, கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் அவரே கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவராவார். அதன்பிரகாரம் இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவுக்குத் தலைவர் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கதான். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு அரசமைத்தால் அக்குழுவின் தலைவரான கட்சித் தலைவரே பிரதமராக முடியும். அது போல எதிர்க்கட்சித் தலைவர் பதவி பிரதான எதிர்க்கட்சியாக அமரப்போகும் ஐ.தே.கட்சிக்கு என்றால், அதனை வகிக்கப்போகின்றவர் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவரான கட்சித்தலைவர்தான். இந்த வகையில், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணிலுக்குத்தான் என்கின்றது கட்சியின் யாப்பு.

அடுத்தது – எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதை அங்கீகரிக்கும் பொறுப்பு சபாநாயகருக்கு உரியது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கரு ஜயசூரியவே இப்போது சபாநாயகர். அவரை மாற்றும் எண்ணம் ஏதும் இன்று பதவி ஏற்கும் புதிய ஆளும் தரப்புக்கு இப்போது இல்லை என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள். ஆட்சி மாற்றத்தை அடுத்து சபாநாயகர் கரு ஜயசூரிய எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணிலுக்குக் கிட்டும் வகையில் முடிவு செய்வார் என்று தெரிகின்றது.

இதனால், ஐ.தே.கட்சித் தலைவர் பதவியில் இருந்து ரணிலை அகற்றும் வரை எதிர்க்கட்சித் தலைவர் பதவி அவருக்குக் கிட்டுவதை சஜித் தரப்பினால் தடுக்க முடியாது என்பதுதான் நிலைமை.

ஆனாலும், கட்சியை உடைப்போம், பிளப்போம் என்றெல்லாம் கூட சில அசுமாத்தங்கள் சஜித் தரப்பிலிருந்து எழுவதாகத் தெரிகின்றது. ஆனாலும் ரணில் பனங்காட்டு நரி. இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சமாட்டார். கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் முற்றும் முழுதாக ரணிலின் கைக்குள் இருக்கின்றமையால் கட்சியின் தலைமைப் பதவியை ரணிலிடம் இருந்து அவ்வளவு விரைவாக – இலகுவாக – சஜித்தினால் தட்டிப் பறித்துவிட முடியாது என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மேலும் நாடாளுமனறத் தேர்தல் விரைவாக வரவிருக்கின்றது. அதில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடுவதாயின் கட்சியின் நிர்வாகத்தைக் கையில் வைத்திருக்கும் தரப்புடன் தான் சேர்ந்து போகவேண்டும், முரண்டு பிடித்தால் வேட்பாளர் பட்டியலில் வெட்டி ஒதுக்கி விடும் ஆபத்து உள்ளது என்ற யதார்த்தம் புரிந்த தரப்புகள் இப்போதைய நிலையில் கட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் ரணில் – அகிலவிராஜ் அணியுடன் இனியும் தொடர்ந்து முண்டி, முட்டி மோதி நிற்பது சந்தேகமே என்று கூறப்படுகின்றது.

அதனால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ரணிலுக்குக் கிடைக்காமல் தட்டிப் பறிக்கும் சஜித்தின் முயற்சி இப்போதைக்குப் பெரும்பாலும் பகல் கனவுதான் என்றே தோன்றுகின்றது.

★ ★ ★

இறுக்கமாகக் காட்டப்பட்ட கூட்டுக்குள் குழப்பம். வீட்டுக்குள்ளேயே ஆரம்பமாகி விட்டதாகத் தகவல்.

இருண்ட யுகம், வெள்ளை வான் கடத்தல் பற்றி எல்லாம் நல்ல அனுபவம் எனக்கு உண்டு. ஆகவே இப்போதைய ஆரம்பத்தை அடக்கி வாசிக்கவே விரும்புகிறேன். பாதுகாப்புக் கருதிய சுயதணிக்கை எழுத்து என்றும் நீங்கள் கருதலாம்.

ஆனாலும், எனது வாசகர்கள் வரிகளுக்கு இடையில் அச்சிலோ, எழுத்திலோ வராத விடயங்களைக் கூட விவரமாகப் புரிந்து கொள்ளக்கூடிய அதீத திறமைசாலிகள். மேலோட்டமாக எழுதினால் அவர்கள் விவரமாகப் புரிந்து கொள்வார்கள்.

பதவிக்கு வந்ததும் ஒரு செயலாளர் நியமனத்தை அவசரப்பட்டு அறிவித்ததில் அண்ணனுக்குக் கொஞ்சம் மனக்குடைச்சல். ஏற்கனவே பலத்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவரை எடுத்த எடுப்பிலேயே நியமித்தமை மூலம் சர்வதேசத்துக்கு பிழையான செய்தி கொடுக்கப்பட்டுள்ளதோ என்ற மனப்பதிவு அவருக்கு.

என்றாலும், அந்தத் துறை விவகாரத்தில் தாம் தலையிடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் மூத்தவர் இருக்கின்றமையால் ஒன்றும் கூறாமல் அமைதி காக்கின்றார் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

தேர்தல் முடிவு வந்த பின்னர், பிரதமர் ரணிலுக்கும் மூத்தவருக்கும் இடையில் தமிழர் ஒருவரே மூன்று, நான்கு தடவைகள் தூது சென்றார் என்றும் ஒரு தகவல்.

ரணில் அரசைத் தொடரவிடும்படி ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மூத்தவர் அதை சாதகமாகப் பரிசீலிக்கவும் தயாராகத்தான் இருந்தாராம் ஆனால், அதிகாரத்துக்கு வந்தவருக்கு அந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. தம்பிமாரின் விருப்பத்துக்கு அமையரணிலைப்பதவிவிலகும் முடிவை எடுக்குமாறு பரிந்துரைத்தார் அண்ணன்.

பிணக்கிலும் இணக்கம் காணும் ஒட்டுறவில்தான் குடும்ப உறவு நாட்டு நிர்வாகமாக நகருகின்றது. எவ்வளவு காலத்துக்கு என்று காலம்தான் பதில் சொல்ல வேண்டும். பார்த்திருப்போம்...!

–மின்னல்–

## இன்றுதான்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த ஐந்து வருடகாலத்தில் நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகளுக்கான சுதந்திரம், கருத்து வெளியிடல் மற்றும் தகவல் அறியும் உரிமை, சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தோம். அதேபோன்று நாட்டை விரைவான அபிவிருத்திப் பாதையொன்றை நோக்கித் திருப்பினோம்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் அனைத்து நிறுவனங்களையும் அரசியல்மயப்படுத்தப்படுவதிலிருந்து விடுவித்தோம். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாகவும், சுயாதீனமானதாகவும், நியாயமாகவும் நடைபெற்றமைக்கு இதுவொரு முக்கிய காரணமாகும். எம்மால் மேற்கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைகளுக்கு எதிர்காலம் சாட்சியம் கூறும்.

நான் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தேன். நாடாளுமன்றத்தின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடினேன். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நாம் கொண்டிருக்கின்ற போதிலும், கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்திருக்கும் மக்கள் ஆணையை ஏற்றுக்கொண்டு அவருக்கு வேண்டியது போன்று அரசை அமைப்பதற்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்தோம்.

நான் பிரதமராகப் பதவிவகித்த காலப்பகுதியில் புகழ்ச்சி மற்றும் பாராட்டுக்களைப் போன்றே, பெருமளவான விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. நல்லதைப் போன்றே கெட்டதையும் கேட்க வேண்டியிருந்தது. என்னைப் போற்றிய, தூற்றிய, பாராட்டிய, விமர்சித்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறுகின்றேன். அதேபோன்று எனது உத்தியோகபூர்வப் பணிகளுக்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

## மஹிந்த...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்றமைக்குச் சீனத் தூதுவர், எதிர்க்கட்சித் தலைவரிடம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார் என எதிர்க்கட்சித் தலைவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அதில் கூறியுள்ளார்.

## டக்ஸுக்கும்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளான இ.தொ.காவின் ஆறுமுகம் தொண்டமான், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருக்கும், சுதந்திரக் கட்சியில் இருந்து மூவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. இவை தவிர எஞ்சிய அமைச்சுப் பதவிகளில் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (ஐ)

## போர்க்காலச்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே தற்போதும் இருக்கின்றார் போன்ற நிலைப்பாட்டையே எடுத்துக் காட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனநாயக அரசியலுக்கு வந்துள்ளதால் போர்க்காலச் சிந்தனைகளில் இருந்து கோட்டாபய மாற வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று புதன் கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிற்பாடு இலங்கையின் அரசியலில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சிங்கள மக்கள் தங்களுக்கான தலைவரைத் தெரிவு செய்கின்ற விடயத்தில் மிகத் தெளிவான நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றார்கள்.

அதே நேரத்தில தமிழ் மக்களும் தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையிலே ஒரு வெளிப்படையான தேர்தல் முடிவைச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலைகள், தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போர் வன்மங்கள் தொடர்பிலே இன்றும் தமிழர்கள் ஆழ்ந்த துக்கத்தோடும் அது பற்றி தெளிவாக சிந்திக்க வேண்டிய எண்ணங்களோடும் இருக்கிறார்கள்.

இந்த எண்ணங்களும் சிந்தனைகளும் கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு போர்க்குற்றவாளியாக, போரை வழிநடத்திய ஒரு மனிதனாக, கிட்டத்தட்ட 146 000 பேரையும் இறுதி யுத்தத்தில் காணாமலாக்கியும், கொல்வதற்கும் காரணமாக இருந்தவர் என்றதொரு எதிர்மனப்பாங்கோடும் பார்க்கின்ற மனநிலை தமிழ் மக்களிடமிருந்து இன்னும் மாறவில்லை.

ஆனாலும் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக எவ்வளவு ரூபாக்களை அவர்கள் செலவழித்து அவர்களுடைய பல முன்னாள் அமைச்சர்களை, படைத் தளபதிகளை களமிறக்கிக் கூட வடக்கிலும் கிழக்கிலும் அவரால் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறுவது மிகக் கடினமானதாகவே அமைந்திருக்கிறது.

அதே நேரத்தில் 11 இலட்சம் வரையான வாக்குகளை தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியிருக்கின்றார்கள். முக்கியமாக அதற்கான காரணம் இங்கே இன வன்மை ரீதியான செயற்பாடுகள் எதுவும் இருக்கவில்லை. நாங்கள் இந்த நாட்டு ஜனாதிபதியை தெரிவு செய்வதில், அவர் சிங்களவர் என்பதற்கு அப்பால் அவர் தமிழ் மக்களுக்கு என்ன செய்வார், அவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்குச் சார்பானதாக என்ன இருக்கிறது என்ற அடிப்படையில் வாக்குகளைப் பதிவு செய்திருக்கின்றோம்.

ஆகவே அதற்குப் பிற்பாடு கூட நான் சிங்கள, பௌத்த வாக்குகளால் தான் தெரிவாகி வந்திருக்கிறேன் என்று திரும்ப திரும்ப அடித்துக் கூறுகின்ற கோட்டாபய, இன்னும் தன்னுடைய போர் வெற்றிகளில் இருந்து அல்லது தன்னுடைய போர்க்காலச் சிந்தனைகளில் இருந்து மாறவில்லை என்பதைத்தான் அவருடைய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் மிக இறுக்கமாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்த மனநிலைகளை அவர் மாற்றத் தவறினால் இயற்கையும் வரலாறும் தான் விரும்பிய திசையிலே இன்னுமொரு பாதைக்கே கொண்டு செல்லும். ஏனென்றால் 2010 ஆம் ஆண்டு இருந்த நிலைமையில் தங்களை யாரும் அசைக்க முடியாத என்று இருந்த ராஜபக்ஷ குடும்பம் 2015 இல் ஆட்டம் கண்ட அந்த வரலாற்றை சரியாகப் படித்திருப்பார்கள்.

இப்பொழுதும் கூட அபிவிருத்தி மட்டும் தமிழர்களுக்கு வழங்கினால் அவர்களுக்கு வேறு தேவைகள் இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தி தமிழர் அரசியல் அபிலாசைகளை குழிதோண்டிப் புதைப்பதற்கு கோட்டாபய நினைத்தால் அது மிக பாரதூரமாக அமையும்.

ஆகவே 80 வருடங்களுக்கு மேலாக தேசிய விடுதலைக்காக போராடி வருகிற தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யப்படவேண்டும். இந்த நிலைமையில் தற்போது வந்திருக்கின்ற அரசியல் தலைவர்கள் குறிப்பாக புதிய ஜனாதிபதி கோட்டாபய ஒரு தெளிந்த மனதோடும் தன்னுடைய யுத்த கால மனநிலைகளைத் தூக்கி வெளியில் கடாசிப் போட வேண்டும்.

ஒரு ஜனநாயக அரசியல் ஊடாக எவ்வாறு அவர் வந்தாரோ அந்த ஜனநாயக அரசியலை சரியாகப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மதித்தல், நடைபெற்ற குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்து அந்த அடிப்படையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியை நிலைநாட்டுவதில் தன்னுடைய பங்களிப்பை செலுத்தினால் தெளிவான தலைவனாகத் தன்னை அடையாளப் படுத்த முடியும் – என்றார். (ஐ-07)

## குடும்பத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் – கே.கே.எஸ். வீதியில் கொக்குவில் சந்திக்கு அண்மையாக நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் 45 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றதையடுத்து காரைச் செலுத்திச் சென்ற யாழ். நகரின் பிரபல நகைக் கடை உரிமையாளர், வாகனத்தை சம்பவ இடத்தில் கைவிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சரணடைந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## தம்பி கோட்டா...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் மஹிந்த பிரதமராகப் பதவியேற்பார். அவருடன் இடைக்கால அரசின் அமைச்சரவையும் பதவியேற்கிறது.

அத்துடன், கொழும்பு 7, புளோபர் வீதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு மஹிந்த ராஜபக்ஷ கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியிலிருந்து விலகுவதையடுத்து ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சரவை கலைகிறது. இந்த நிலையிலேயே மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசு இன்று பதவியேற்கிறது. (ஐ)

## அமைச்சுப்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான சாத்தியப்பாடுகள் எதுவும் இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணாமல் இந்த அரசிலோ அல்லது எந்த அரசிலோ அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது தமிழ் மக்களுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும்.

– இவ்வாறு தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஒரு அரசியல் தீர்வில்லாமல், தமிழர்களுக்கான நிரந்தர – அவர்களுடைய தேசிய அபிலாசைகள் பூர்த்தி செய்யக் கூடியதான உரித்துக்களைச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கக் கூடிய வகையில் ஒரு தீர்வை இந்த அரசுகள் முன்வைக்காத நிலையில் நாங்கள் மத்திய அரசுடன் அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளல் என்பது இயலாமையின் வெளிப்பாடாகவே அமையுமே – என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பினர் அமைச்சுப் பதவிகளைப் பெறுவது குறித்து சுமந்திரன் சொன்ன கருத்துக்கு ஒரு காரணம் இருக்கலாம். சில வேளை இது தொடர்பில் மக்கள் என்ன கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று மக்களிடம் ஆராய்வதற்காக இந்தக் கருத்தை முன்வைத்திருக்கலாம். அல்லது இப்படி ஒன்றைச் சொல்லிப் பார்ப்பதன் மூலம் என்ன விளைவுகள் வருகிறதென்பதை ஆராய்வதற்காகவும் இருக்கலாம்.

ஆனால் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதென்ற விடயத்தில் ஒரு யதார்த்தம் இருக்கிறது. அது எப்படியென்றால் நாங்கள் 60 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்தவர்கள். குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் அமைச்சர் பதவி வகித்த போது அவரது அமைச்சின் செயலாளரே அவருக்குக் கட்டுப்படாமல் இருந்த மையால் அந்தப் பதவியைத் தாமாகவே இராஜினாமா செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆகவே நாங்கள் கடந்த காலங்களில் அவ்வாறான அனுபவங்களைக் கொண்டவர்கள்.

இலங்கையிலே முதன்முதலில் சிங்கள தேசிய இனத்தோடு தமிழ்த் தேசிய இனம் தான் அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கூட இணக்க அரசியலுக்கான முன்மொழிவுகளை, வழிகாட்டுதல்களைச் செய்திருந்தது. ஆனால் அதனைச் சரியாக சிங்கள தேசிய இனத்தவர்கள் செய்யவில்லை. ஆக அவர்கள் சிங்களப் பேரினவாத எண்ணங்களோடு இருந்தவர்கள் என்பதால் எங்களோடு அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை.

ஆனாலும் அன்றிருந்தவை போன்று நிலைமைகள் இப்போது இல்லை. இப்போது இருக்கிற சூழல் அதுவுமல்ல. நாங்கள் ஒரு நீண்ட யுத்தத்திற்குப் பிற்பாடு கிட்டத்தட்ட 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களை இந்த மண்ணில் விதைத்திருக்கிறோம். 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் காணாமலாக்கப்பட்டும் இருக்கின்றார்கள். நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. இப்பொழுதும் தமிழர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள். அரசியல் கைதிகளின் விடுதலை என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இதனை விட வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களிற்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை. ஜெனிவாவிலே அதற்கான பிரேரணைகள் கொண்ட வரப்பட்டு கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு சூழல்களும் இங்கே இருக்கிற நிலையில் நாங்கள் போய் அமைச்சர்களாகப் பதவியேற்ற பிற்பாடு அந்த அமைச்சுப் பதவியில் இருக்கின்றபொழுது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்குமா அல்லது விடுவிக்கப்படாத நிலங்களை விடுவிப்பார்களா அல்லது அரசியல் கைதிகளை விடுதலை செய்வார்களா, வடகிழக்கில் இராணுவத்தை குறைப்பார்களாக என்ற பல கேள்விகள் இருக்கின்றன.

இந்த விடயங்கள் எல்லாம் நடக்காத சூழலில் நாங்கள் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கக் கூடிய சாத்தியப்பாடுகள் எதுவும் இல்லை.

ஆனால் இப்படியான கருத்துக்களை சில வேளைகளில் அரசியல் கட்சியின் பேச்சாளர் என்ற வகையில் அவர் முன்வைத்திருக்கலாம். ஆனால் நாங்கள் இந்த அரசிலோ அல்லது எந்த அரசிலேனும் கூட அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது தமிழ் மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும் – என்றார். (ஐ-07)

## மாகாணங்களின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

நாட்டின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று நிலையில் ஆளுநர்கள் தமது பதவி விலகலை அவருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதி புதிதாக பதவியேற்றுள்ள நிலையில் அவரது தலைமைத்துவத்தின் கீழ் புதிய ஆளுநர்களை நியமிக்கும் வகையில் ஜனாதிபதி செயலகத்தால் கோரப்பட்டதற்கு அமைய இந்த பதவி விலகலை 9 மாகாணங்களின் ஆளுநர்களும் அறிவித்துள்ளனர். (ஐ)

## பொய்க்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்களை விடுவிக்கும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்ற பின்னர் பொதுஜன பெரமுன ஆதரவாளர் சிலர் நடந்து கொண்ட விதம் வருத்தமளிக்கின்றது.

எமது ஆதரவாளர்கள் பள்ளிவாசல்களுக்கு வெளியே அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் வீடுகளுக்கு வெளியே வெடி கொளுத்தியிருந்தால் நாம் வருத்தம் தெரிவிக்கின்றோம். பள்ளிவாசல்களுக்கு முன்பாக வெடிகளைக் கொழுத்த வேண்டாம் என்று ஆதரவாளர்களிடம் நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

எமது அரசு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்ற பின்னர், பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து அல்லது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை விடுவிக்கும். உதாரணமாக தாஜுதீன் வழக்கில் ஒரு வருடத்துக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் போன்றோரை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்.

பொது சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்கள் குறித்து விசாரிப்போம். ஆனால் சட்டத்தை வளைப்பதன் மூலமோ அல்லது மீறுவதன் மூலமோ அல்ல. – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அதீத கவனிப்புக்குள்ளாகும் கோட்டாவின் புதிய அரசு

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு யாது என்பதைத் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்டிருக்கின்றார்.

"ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பு, தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பு என்பன போன்ற பல்வேறு திசை திருப்பங்களுக்கு மத்தியிலும், அவற்றுக்குச் செவி சாய்க்காது, எமது (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்) வேண்டுகோளுக்கு அமைய ஒற்றுமையாக சஜித் பிரேமதாஸவின் அன்னம் சின்னத்துக்கு எமது தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர். இதனூடாக இலங்கை ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்கள் ஓர் உறுதியான செய்தியைக் கூறி இருக்கின்றனர். அதாவது தமது உரிமை தொடர்பான வேட்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருக்கின்றமையை எமது மக்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்." – என்று தெரிவித்திருக்கின்றார் கூட்டமைப்பின் தலைவர்.

தமிழ் மக்கள் மாத்திரமல்லர், இந்த நாட்டின் ஏனைய சிறுபான்மையினர் எல்லோருமே ஒன்று சேர்ந்துதான் – ஐக்கியப்பட்டு நின்றுதான் – இந்தச் செய்தியை ஒரே முகத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இது சர்வதேசத்தின் செவிப்பறைகளில் ஏறுமா? புதிய ஆட்சியாளர்களினால் கேட்கப்படுமா? – என்பன கேள்விக்குரியவையாகத் தொடரப் போகின்றன.

இந்தப் பின்புலத்தின் சூழலில்தான் தெற்கில் இன்று ஆட்சி மாற்றம் ஏற்படப் போகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒரு தடவை தமது அரசைத் தொடர முடியாது – இடைவழியில் – திரும்பவும் பாதியில் – அதைக் கோட்டை விடுகின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பதினைந்து பேர் கொண்ட புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் கொழும்பில் இத்தகைய அதிரடி அரசியல் மாற்றங்களுக்கு வழி செய்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இருக்கின்றதோ இல்லையோ, அதனை இப்போது நாடாளுமன்றத்தில் பரீட்சித்துப் பார்க்கவோ அல்லது சவாலுக்கு உட்படுத்தவோ மற்றைய தரப்புகள் முயலப் போவதில்லை என்பது திண்ணம்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின் மூலம், தென்னிலங்கை மக்கள் வழங்கியுள்ள திட்டவட்டமான இந்தத் தீர்ப்பின் பின்னரும், நாடாளுமன்றத்தில் எமக்குத்தான் பெரும்பான்மை, சட்டப்படி நாமே அரசில் தொடருவோம் என்று அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டு அதிகாரத்தில் தொடர முடியாத இக்கட்டு பிரதமர் ரணில் தரப்புக்கு.

அப்படித் தொடர்ந்தால் நாடாளுமன்றத்தில் குதிரைப் பேரமும், கட்சித் தாவலும் அநாயசமாக நடக்கும் என்பது திண்ணம்.

பிரதமர் ரணிலின் தரப்பில் இருந்த அமைச்சர்கள் பலரும் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பைத் துறந்து, தம்பாட்டில் ஒவ்வொருவராகப் பதவியை இராஜினமாச் செய்து அந்த அரசின் வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறிய பின்னர், அந்த அரசில் தொடர்வதற்கு – பிரதமர் பதவியில் நீடிப்பதற்கு – தமக்குத் தார்மீக உரிமையும், நியாயமும் கிடையாது என ரணில் விக்கிரமசிங்க தீர்மானத்திருப்பார் என்றே தோன்றுகின்றது.

சிறுபான்மையினரான தமிழர் தரப்பை ஓரளவேனும் பரிவுடன் நோக்கிய ஓர் அரசின் பதவிக்காலம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றது.

பல்வேறு அரசியல் நெருக்கடிகள், அதிகார அழுத்தங்கள், ஆட்சி மாற்றப் புயல்களுக்கு மத்தியிலும், சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு, நிலைத்துத் தாக்குப்பிடித்து நிலைநிறுத்திய ஓர் அரசின் பதவிக்காலம் இப்படி முடிவுக்கு வருவது உண்மையில் சிறுபான்மை மக்கள் தரப் புக்கு ஒரு பேரிழப்பே.

ஓரிரு சிறுபான்மை இனப் பிரதிநிதிகளைக் கொண்டு அமையப் போகும் புதிய அரசில் – அமைச்சரவையில் – சிறுபான்மை இன மக்களின் நிலைமை எத்தகையதாக இருக்கப் போகின்றது என்பது உண்மையில் கவலையை ஏற்படுத்தும் விடயமாகத்தான் அமைகின்றது.

அதுவும் இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் பேரெழுச்சி கொண்டிருக்கும் இச்சமயத்தில், உரிய சிறுபான்மை இனப் பிரசன்னமோ, பங்களிப்போ இன்றி அமையப் போகும் பௌத்த, சிங்கள சிந்தனைப் போக்குக் கொண்ட அதிகாரத் தரப்பாரின் புதிய அரசு, சிறுபான்மை இன மக்களினால் பெரிதும் சந்தேகக் கண் கொண்டே நோக்கப்படப் போகின்றது.

பௌத்த, சிங்கள மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டாலும் இலங்கையின் முழு மக்களுக்குமே நான்தான் ஜனாதிபதி என்று கூறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசுத் தரப்பினரும் சிறுபான்மையினர் விடயத்தில் எப்படி நடக்கப் போகின்றார்கள் என்பதை உலகம் அவதானத்துடன் பார்த்திருக்கின்றது – பூதக் கண்ணாடி போட்டு பார்த்திருக்கின்றது – என்பதை அவர்கள் மறக்கக் கூடாது.

### மிருசுவிலில் எண்மர் படுகொலை;

## கொலையாளிக்குப் பொதுமன்னிப்பு என்று வெளியாகிய தகவல் முற்றிலும் தவறானது

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் மிருசுவிலில் 8 பொதுமக்களைப் படுகொலை செய்த குற்றத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகிய செய்தியை சிறைச்சாலைகள் திணைக்களம் மறுத்துள்ளது.

ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியுள்ளார் என்று சமூக வலைத் தளங்களில் தகவல் வெளியாகியிருந்தது.

எனினும் இந்தத் தகவலைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் அடியோடு மறுத்துள்ளார்.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி, மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற 8 பொதுமக்கள், இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு, கழிப்பறைக் குழிக்குள் போடப்பட்டனர்.

அவர்களுடன் சென்ற மற்றொருவர் தப்பிச் சென்று வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில், சடலங்கள் மீட்கப்பட்டமையுடன், ஐந்து படையினருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ட்ரயல் அட் பார் முறையில் நடந்த இந்த வழக்கில், 2015ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் நாள், ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க என்ற இராணுவ அதிகாரிக்குத் தூக்குத் தண்டனை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஏனைய நான்கு படையினரும் போதிய சாட்சிகளில்லை என விடுவிக்கப்பட்டனர்.

இந்த தீர்ப்புக்கு எதிராக, ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார்.

அவரது மேன்முறையீடு முன்னாள் தலைமை நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்கள் புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜெயவர்த்தன, மூர்து பெர்னான்டோ ஆகிய ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வினால் விசாரிக்கப்பட்டது. அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டதுடன், மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது. (ஐ)

## டெங்கு நோய்த் தொற்றால் பாடசாலை மாணவி சாவு!

யாழ்ப்பாணம், நவ. 21

டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளான மாணவி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் கடந்த 3 நாள்களாக சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று முன் தினம் காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் உடுவிலைச் சேர்ந்த ஸ்ரீசுதாகரன் பெண்சிட் பிரசாந்தி (வயது – 9) என்ற பாடசாலை மாணவியே உயிரிழந்தார்.

கடந்த 16ஆம் திகதி காய்ச்சல் காரணமாக சிறுமி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு டெங்கு நோய்த் தொற்று உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு 3 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் மாணவி சிகிச்சை பயனின்றி நேற்று முன் தினம் காலை உயிரிழந்தார் எனத் தெல்லிப்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணைகளை மல்லாகம் பிரதேசத்திற்கு பொறுப்பான திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மோகன் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனை பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## பிரியங்கவுக்கு எதிரான வழக்கு; டிசெம்பரில் மீண்டும் விசாரணை

கொழும்பு, நவ. 21

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கையின் 70 ஆவது சுதந்திரத்தினக் கொண்டாட்டத்தின்போது, அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை வெஸ்ட்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே அவருக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிவான் அறிவித்தார்.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, தமிழ் மக்களுக்கு ஒரு நீதி கிடைக்கவேண்டுமென்பதை வலியுறுத்தி நீதிமன்றத்துக்கு முன்னால் புலம்பெயர் அமைப்புக்கள் ஆர்பாட்டத்தை மேற்கொண்டன.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை உடனடியாகக் கைது செய்யுமாறு அந்த அமைப்புகள் இதன்போது வலியுறுத்தின. (ஐ)

## ரயில் கடவை காவலாளி ரயிலில் மோதுண்டு பலி

கொழும்பு, நவ. 21

கொழும்புக் கோட்டையிலிருந்து பதுளை வரை பயணித்த பொடி மெனிக்கே ரயிலில் மோதுண்டு, ரயில் கடவைக் காவலாளி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

ஹற்றன் – மல்லியப்பு சந்திக்கருகிலுள்ள ரயில் கடவையில் கடமையாற்றிய, 47 வயதுடைய எஸ். மோகன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொடி மெனிக்கே ரயில் வரும்போது, ரயில் கடவையை மூடச் சென்ற இவர், ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளாரென்றும் இவரது வீடும் அந்த ரயில் கடவைக்கு அருகில் இருப்பதால், ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளாரா அல்லது தற்கொலை செய்துக்கொண்டுள்ளாரா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் ஹற்றன் பொலிஸார் கூறினர். (ஐ)




**நாளை**
22.11.2019
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப 3.34 வரை
திதி : தசமி காலை 7.11 வரை
இராகுகாலம் : 10.40 – 12.10
சுப நேரம் : 6.10 – 7.40

## கடமைகளைப் பொறுப்பேற்றார் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன



கொழும்பு, நவ. 21

பாதுகாப்புச் செயலாளராக முன்னாள் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அவர் நேற்றுத் தனது கடமைகளைப்பொறுப்பேற்றுக்கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவை ஜனாதிபதி கோட்டாபய நியமித்தார்.

அவர் 1982ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி 2ஆவது லெப்டினனனாக இலங்கை இராணுவத்தில் இணைந்துகொண்டார்.

இராணுவத்தில் பல பதவிகளை வகித்துள்ள அவர் இறுதிப் போரின் போது இராணுவத்தின் 53 ஆவது படையணிக்குத் தலைமைதாங்கிவழிநடத்தி இருந்தார்.

2016ஆம் ஆண்டு இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற அவர் பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி கோட்டாவை சந்தித்துப் பேசத் தயார்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 21

புதிய ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் முதலில் சொன்னது போல தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்கவேண்டும். அதனால் நாம் எங்களுடைய மக்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாக புதிய ஜனாதிபதியிடம் பேசியே ஆகவேண்டும்.

அடுத்ததாக நாம் எதிர்பார்க்கின்ற இன்னொரு விடயம் வடக்கு, கிழக்குகளில் இருக்கின்ற முப்படையும் தமது விருப்பத்திற்கேற்பவே செயற்படும் நிலை ஏற்படக் கூடும்.

ஆகவே அந் நிலை நிறுத்தப்படவேண்டும் என்ற நிலையில் நாம் ஜனாதிபதியைச் சந்தித்து பேசவேண்டும்.

அந்த வகையில் ஜனாதிபதியைச் சந்தித்து பேசத் தயாராக இருக்கின்றோம். எம் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள், அநீதிகளை அவர்களூடாக நிறுத்தவேண்டும் என்ற நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக செயற்படும் – என்றார். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், நவ.21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகநாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

உன்னாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு, வண்ணாங்குளம், வட்டுவாகல், கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**

நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், பெரியகாடு, படியாபாம், மெனிக் பாம், ஆண்டியபுளியங்குளம், கிறிஸ்தவகுளம், சக்திகம, முகத்தான்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## தமிழகத் தலைவர்களின் விமர்சனங்கள் தமிழர் வாழ்வுக்குக் கேடு விளைவிக்கும்

### சொல்கிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதித் தேர்தலில், கோட்டாபய ராஜபக்ஷவின் தெரிவை, தமிழக அரசியல் தலைவர்களில் ஒரு சிலர் தமது வாய்க்கு வந்தபடி விமர்சனம் செய்கிறார்களெனத் தெரிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி, இது, தமது மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்காமல் மேலும் மேலும் துன்பத்துக்கு வழிவகுத்துவிடுமெனவும் எச்சரிக்கை விடுத்தார்.



இது குறித்து, அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தமிழக அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, புதிய ஜனாதிபதியை அணுகி, அவருடன் பேச்சு நடத்தி, இந்திய மாநிலங்களுக்குள்ள அதிகாரத்தை ஒத்த ஓர் அரசமைப்பைப் பெற்றுத்தர இந்திய மத்திய அரசின் அனுசரணையுடன் முயற்சிக்க வேண்டும்.

உங்களில் ஒரு சிலரினதும் புலம்பெயர் நாட்டுப் பிரமுகர்கள் சிலரினதும் அறிக்கைகள், இங்குள்ள தமது சகோதர இனங்களுக்கிடையிலான விரிசலை மேலும் வலுவடையச் செய்யுமே தவிர, வேறு ஆக்கபூர்வமான எதையும் செய்யப்போவதில்லை.

இதை நீங்கள் உணர்ந்து, இன முறுகலை ஏற்படுத்தா தவாறு உங்கள் அறிக்கைகள் அமைய வேண்டும்.

நீங்கள் அக்கறையெடுத்துச் செயற்பட விரும்புவீர்களேயானால், தாம் ஒரு புத்திஜீவிகள் அடங்கிய தூதுக்குழுவாக உங்களைச் சந்தித்து, உங்கள் ஆலோசனைகளைப்பெற்று, தமது பிரச்சினைக்கு ஒரு தீர்வை அடைய ஆர்வமுடன் இருக்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

## யாழ்.பல்கலை தகுதிவாய்ந்த அதிகாரிக்குப் பதவி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாண பல்கலைக்க முகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாக வாழ்நாள் பேராசிரியர் கந்தசாமிக்கு எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 06 ஆம் திகதி வரை பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத்தலை வர் பேராசிரியர் மெஹான் டி சில்வாவினால் இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தின் பிரிவு 20, உப பிரிவு 4 (பி) க்கு அமைவாக நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரினால் கடந்த 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2148/35 ஆம் இலக்க அதி சிறப்பு வர்த்தமானி கட்டளைக்கு அமைவாக இம் மாதம் 7 ஆம் திகதி முதல் மூன்று மாத காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பதவிக்காக வாழ் நாள் பேராசிரியர் க. கந்தசாமிக்கு வழங்கப்படும் மாதாந்தப்படி, அலுவலகம் மற்றும் ஆளணி, குறித்தொதுக்கப்பட்ட வாகனம், சாரதி, எரிபொருள் உட்பட சகல வசதிகளும் யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தினால் வழங்கப்படும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் திடீரென பதவி நீக்கப்பட்டதன் பின்னர் மே மாதம் முதல் வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி உயர்கல்வி அமைச்சரினால் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் கடமைகளையாற்றும் வகையில் தகுதி வாய்ந்த அதிகாரியாக மூன்று மாதங்களுக்க நியமிக்கப்பட்டு, கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் அடுத்த மூன்று மாதங்களுக்கு பதவி நீடிப்பும் வழங்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 07 ஆம் திகதி முதல் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி வரை மீள் பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக் கழக துணை வேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கடந்த 16 ஆம் திகதி இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக துணைவேந்தர் தெரிவுக்கான நடவடிக்கைகள் அனைத்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது தேர்தல் நிறைவு பெற்றிருக்கும் நிலையில், துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்திருக்கும் 9 பேரில் பொருத்தமான மூவரை பேரவையில் தெரிவு செய்து, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கும் பொறுப்புதகுதி வாய்ந்த அதிகாரியையே சாரும்.

பேரவையினால் பரிந்துரைக்கப்படும் மூவரில் ஒரு வரைத் துணைவேந்தராக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காலியில் சூறாவளி!

### 20 குடும்பங்கள் பாதிப்பு

**கொழும்பு, நவ. 21**

**காலி, வதுரம்ப மெதகிஒய பகுதியில் ஏற்பட்ட டொனேடோ சூறாவளி காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 74 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

**அத்தோடு, 11 வீடுகள் சேதமடைந்துள்ளன எனக் காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

**பயிர் நிலங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.**

**இந்த அனர்த்தம் காரணமாக பாரிய மரங்களும் சரிந்து விழுந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)**

## வாக்காளர் பட்டியல் குறித்து 70,000 மேன்முறையீடுகள்!

கொழும்பு, நவ. 21

2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தொடர்பில் 70,000 மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேசியத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மேன்முறையீடுகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டத் தேர்தல் அலுவலகங்களின் ஊடாக இது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் கூறினார்.

2019 ஆம் ஆண்டுகான தேர்தல் பட்டியல் அடுத்த மாதம் 31 ஆம் திகதி உறுதிப்படுத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# சபரிமலையில் தரிசனத்துக்கு 319 பெண்கள் முன்பதிவு; அவர்கள் வந்தால் திருப்பி அனுப்ப பொலிஸார் தீர்மானம்

சபரிமலை,நவ 21

சபரிமலையில் தரிசனத்துக்கு 319 பெண்கள்ஒன் லைனில் முன்பதிவு செய்துள்ளனர். அவர்கள் வந்தால் திருப்பி அனுப்ப கேரள பொலிஸார் முடிவு செய்து உள்ளனர்.

சபரிமலை அய்யப்பன் கோவிலில் மண்டல, மகர விளக்கு பூஜைக்காக கடந்த 16ஆம் திகதி நடை திறக்கப்பட்டது. நடை திறந்த முதல்நாளே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

இதற்கிடையே 10 முதல் 50 வயதுக்கு உட்பட்ட பெண்கள் குழுவாக இணைந்து சபரிமலை வர உள்ளனர் எனவும், பாதுகாப்பு தர வேண்டும் எனவும் பெண்கள் அமைப்புகள் விடுத்த கோரிக்கையை தேவசம் போர்டு மந்திரி ஏற்க மறுத்து விட்டார். மேலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது.

இதுபற்றி பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் தேவஸ்தான ஊழியர்கள் கூறும்போது – "கோவிலின் ஐதீகம் பற்றிக் கூறியதும், இளம்பெண்கள் பலர் அவர்களாகவே திரும்பி சென்று விடுகிறார்கள். மற்றவர்களை நாங்கள் நிலக்கல் பகுதியிலேயே தடுத்து நிறுத்தி விடுகிறோம். முதல் நாளில் 10 பெண்களும், நேற்று முன்தினம் ஆந்திராவைச் சேர்ந்த 2 பெண்களும் திருப்பி அனுப்பப்பட்டனர்." – என்றனர்.

சபரிமலைக்கு வரும் பெண்கள் அனைவரும் அவர்களின் வயது சான்று மற்றும் ஆதார் நகல்களைக் கொண்டு வர வேண்டும் என்று தேவஸ்தானம் அறிவித்துள்ளது.



ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்வோரும் இந்த விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். இந்த ஆண்டு சபரிமலை செல்ல சுமார் 8 லட்சம் பக்தர்கள் முன் பதிவு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் பெண்களின் எண்ணிக்கையையும், அவர்களின் வயது விவரமும் கடுமையாக பரிசோதிக்கப்படுகின்றன.

இன்றைய நிலவரப்படி 319 இளம்பெண்கள் சபரிமலை செல்ல ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்துள்ளனர். இவர்களில் தமிழகத்தில் இருந்து 139 பேரும், ஆந்திரா 160, கர்நாடகா 9, தெலுங்கானா 8, ஒடிசாவில் இருந்து 3 பேரும் முன்பதிவு செய்திருக்கிறார்கள். இதனைத் தெரிவித்த தேவஸ்தான அதிகாரிகள் கேரளாவில் இருந்து இளம்பெண்கள் யாரும் முன் பதிவு செய்யவில்லை என்பதையும் தெரிவித்தனர்.

மேலும் மண்டல பூஜை, மகர விளக்கு விழா காலங்களில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருப்பதையே பொலிஸ் தரப்பும், அரசும் விரும்புகின்றன. இதனால் கோவிலுக்கு இளம்பெண்கள் யாராவது வந்தால் அவர்களை பொலிஸார் தடுத்து உரிய அறிவுரை கூறி திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை சபரிமலையில் சாமி தரிசனம் செய்ய தமிழகத்தை சேர்ந்த சிறுமி ஒருவர் தனது தந்தையுடன் வந்தார். பம்பையில் அந்த சிறுமியை சோதனை செய்த போது சிறுமிக்கு 12 வயது என்பது தெரிய வந்தது. 10 வயதுக்கு மேல் உள்ள சிறுமிகளைத் தரிசனத்துக்கு அனுமதிப்பது இல்லை என்பது கோவிலின் ஐதீகம். எனவே அந்தச் சிறுமியை தரிசனத்துக்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதையடுத்து சிறுமியின் தந்தை மட்டும் சாமி தரிசனம் செய்தார். அதன்பிறகு அவர் சிறுமியை அழைத்து கொண்டு ஊருக்கு வந்தார்.

சபரிமலைக்கு அய்யப்பனை தரிசனம் செய்ய 9 வயது சிறுமி ஒருவர் தனது தந்தையுடன் வந்தார். அப்போது அவர், தனது கழுத்தில் அட்டை ஒன்றை கட்டி தொங்கவிட்டு இருந்தார். அதில், 'இப்போது எனக்கு வயது 9. இனி நான் எனது 50 வயதில்தான் அய்யப்பனை தரிசனம் செய்ய வருவேன். அதற்கு முன்பாக கோவில் ஐதீகத்தை நான் மீற மாட்டேன்' என்று எழுதி இருந்தது. இதைக்கண்ட அய்யப்ப பக்தர்கள் அந்தச் சிறுமியைப் பாராட்டினர்.

# முழு அரச மரியாதைகளுடன் பணியில் ஓய்வு பெற்ற நாய்கள்



டெல்லி மெட்ரோ ரயில் நிறுவனத்தின், சி.ஐ.எஸ்.எவ். பிரிவில் பணியிலிருந்த 7 நாய்கள், பணி ஓய்வு பெறும் விழா டெல்லியில் நடைபெற்றது.

துணைப் பாதுகாப்பு படையில் கடந்த 8 ஆண்டுகளாக பணியாற்றிய இந்த நாய்கள் தற்போது பணி ஓய்வுபெற்றுள்ளன. அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் அவற்றுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, முழு அரசு மரியாதையுடன் ஓய்வுபெற்றன. முன்னதாக விழாவுக்கு அழைத்து வரப்பட்ட நாய்களுக்கு வீரர்கள் சல்யூட் அடித்து மரியாதை செலுத்தினர். மத்திய தொழில் பாதுகாப்புப்படை வரலாற்றிலேயே, நாய்கள் ஓய்வுபெறுவதற்கு விழா நடத்தப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொலிஸில் முறைப்பாடுகளை பதிவு செய்யும் ரோபோ மனிதன்

## ஆந்திராவில் முதன்முறையக அறிமுகம்



ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே இந்தியாவிலேயே முதல் முறையாக காவல்நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் சைபீரா எனும் ரோபோ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மஹாராணிப் பேட்டை காவல் நிலையத்தில் உள்ள இந்த ரோபோவில், 360 டிகிரியிலும் படம் பிடிக்கும் வகையில், 13 கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன.

இதன்மூலம் பழைய குற்றவாளிகளை கண்டால், கட்டுப்பாட்டு அறைக்கு சைபீரா செய்தி அனுப்பும். அதில் இணைக்கப் பட்டுள்ள கணினி திரையில் கேட்கப்படும் தகவல்களை உள்ளீடுசெய்வதன்மூலமும், அல்லது குரல் பதிவின் மூலமும் முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்.

முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனில், 24 மணி நேரத்திற்கு ஒரு முறை உயரதிகாரிகளுக்கு நினைவூட்டல் செய்தி அனுப்பும் இந்த ரோபோவை, ரோபோ கப்லர் எனும் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

# உலகிலேயே குள்ளமான பெண்ணின் வீட்டில் துணிகரத் திருட்டு; பொலிஸார் விசாரணை!



நாக்பூர்,நவ. 21

உலகிலேயே மிகவும் குள்ளமான பெண் ஜோதி அம்கே. 62.8 செ.மீ. உயரம் மட்டுமே உள்ள இவர், கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார். மராட்டிய மாநிலம் நாக்பூர் அருகே உள்ள பகத் கன்ஜ் பகுதியில் வசித்து வரும் ஜோதி அம்கே, குடும்பத்துடன் வெளியூர் சென்று விட்டார்.

நேற்றுக் காலை வீட்டிற்கு திரும்பி வந்தபோது, மர்மநபர்கள் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து பீரோவில் இருந்த தங்க மோதிரம் மற்றும் பணத்தை அள்ளிச் சென்றமை தெரியவந்துள்ளது. இந்த துணிகரத் திருட்டில் ஈடுபட்ட மர்மநபர்களை பொலிஸார் வலைவீசித் தேடி வருகிறார்கள்.

# விமானத்தில் டெல்லி செல்லும் பயணிகளுக்கு முகக் கவசம்

## 'ஏர் ஏசியா' நிறுவனம் அறிவிப்பு



புதுடெல்லி,நவ.21

விமானத்தில்டெல்லி செல்லும் பயணிகளுக்கு முகக்கவசம் வழங்கப்படும் என ஏர் ஏசியா நிறுவனம் அறிவித்துள்ளது.

டெல்லியில் காற்று மாசு அதிகரித்துள்ளதால் பயணிகளின் ஆரோக்கியம் கருதி பெங்களூரு, ஐதராபாத், மும்பை, கொல்கத்தா ஆகிய 4 நகரங்களில் இருந்து டெல்லி செல்லும் விமான பயணிகளுக்கு முகக்கவசம் வழங்கப்படும் என்று 'ஏர் ஏசியா இந்தியா' விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டம் நேற்று முந்தினமே தொடங்கிவிட்டது. தொடர்ந்து 29 ஆம் திகதி வரை 10 நாள்களுக்கு இந்த முகக்கவசம் வழங்கப்படும். இந்தத் திட்டம் 'எம்பைன்' நிறுவனத்துடன் இணைந்து அமல்படுத்தப்படுகிறது. குளிர்காலம் தொடங்கியதும் டெல்லியில் காற்று மாசு குறைந்துவிடும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மெக்ஸிக்கோ நெடுஞ்சாலையில் 3 பஸ்கள் அடுத்தடுத்து மோதின!



## 13 பேர் சாவு; 29 பேர் படுகாயம்

மெக்ஸிக்கோ நாட்டின் தலைநகர் மெக்ஸிக்கோ சிட்டி மற்றும் பச்சுவ்கா நகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் 3 பஸ்கள் அடுத்தடுத்து, ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன.

இந்தக் கோர விபத்தில் 11 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிர் இழந்தனர். மற்றும் இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்தனர். உயிரிழந்தவர்களுள் மூன்று வயதுச் சிறுவனும் அடங்குகிறான். 29 ஆண்கள், 20 பெண்கள் என 29பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 16 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கள் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றிருக்கின்றது.

# சீன சுரங்க வெடிவிபத்தில் 15 பேர் சாவு; 20 பேர் மீட்பு

சீனாவிலுள்ள நிலக்கரி சுரங்க வெடிவிபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

சீனாவில் பிங்யாவ் பகுதியிலுள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் மதியம் திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. சுரங்கத்தினுள் வேலை செய்து கொண்டிருந்த 35 பேரில், 15 பேர் இந்த விபத்தில் பலியாகினர்; 9 பேர் படுகாயமடைந்தனர்.

இதிலிருந்து தப்பித்த 11 பேர் காயத்தாலும் அதிர்ச்சியாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.



# இயல்பு நிலை திரும்பும் வரை இணைய முடக்கம் தொடரும்

## ஈரான் அரசு திட்டவட்ட அறிவிப்பு



ஈரானில், போராட்டங்கள் முடிவுற்று, இயல்பான சூழலில் திரும்பியிருப்பதாக, நம்பிக்கை ஏற்பட்டால் மட்டுமே, இணையத்தள சேவை முடக்கம் கைவிடப்படும் என அந்நாட்டு அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை 300 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தலைநகர் தெஹ்ரான் உட்பட ஈரான் முழுவதும் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன.

அரசுக்கு எதிரான இந்த போராட்டங்கள், வாட்ஸ் ஆப், பேஸ்புக், ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலம் ஒருங்கிணைப்படுகின்றன என எழுந்த சந்தேகத்தால், கடந்த சனிக்கிழமை முதல், இணையதள சேவையை, ஈரான் அரசு எவ்வித அறிவிப்பும் இன்றி முடக்கி வைத்திருக்கிறது.

# அமேசான் காடுகள் அழிப்பு மிக மோசம்

## ஒப்புக் கொள்கிறது பிரேசில்



பிரேசில்,நவ.21

அமேசான் காடுகள் கடந்த 11 ஆண்டுகளில் மிக அதிக அளவில் அழிக்கப்பட்டுள்ளன என பிரேசில் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி அமேசான் காடுகள் அழிக்கப்படும் விகிதம் இதுவரை இல்லாத அளவிற்கு, கடந்த 11 ஆண்டுகளில் மிக அதிக அளவில் உள்ளது.

அமேசான் காடுகளில் இந்த ஆண்டு ஏற்பட்ட காட்டுத்தீயின் விளைவாக பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. செயற்கைகோள் புகைப்படங்கள் மூலமாக இந்தத் தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ, அமேசான் காடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அமேசான் காடுகளை பாதுகாக்க ஜி7 உச்சிமாநாட்டின் போது வழங்கப்பட்ட 20 மில்லியன் டொலர்களை போல்சனாரோ ஏற்க மறுத்துவிட்டார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் அமேசான் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த அமெரிக்க அரசாங்கம் உதவத் தயாராக இருப்பதாக கூறினார்.

இருப்பினும் இந்த வியத்தில் பிரேசில் அரசாங்கத்திற்கு எந்த உதவியும் தேவையில்லை என்று போல்சனாரோ கூறியமை குறிப்பிடத்தக்கது.

# காருடன் கொதி நீரில் விழுந்த இருவர் உடல் வெந்து மரணம்

ரஷ்யாவில் காருடன் கொதிநீர் குழாயில் விழுந்த இருவர் உயிரிழந்தனர்.

பென்ஸா என்ற நகரத்தில் கடுங்குளிர் காரணமாக பிரமாண்ட குழாய் வழியாக வீடுகளுக்குக் கொதிநீர் விநியோகிக்கப்படுகிறது.

இந்நிலையில் அந்த நகருக்குள் கார் ஒன்றில் இருவர் சென்று கொண்டிருந்தபோது சாலையில் திடீரென ஏற்பட்ட பிரமாண்டப் பள்ளத்தில் கார் கவிழ்ந்து விழுந்தது.

கார் விழுந்த வேகத்தில் கொதிநீர்குழாயில் உடைப்பு ஏற்பட்டதால் இருவரும் காருடன் வெந்து போயினர்.

படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். அதிக வெப்பநிலையால் சாலை உருகியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.



# 190 ஆண்டுகளுக்கு முந்திய கையெழுத்து பிரதி ஏலத்தில்!

## 15 கோடி ரூபாவுக்கு விற்பனை



190 ஆண்டுகளுக்கு முந்தைய, மிகச்சிறிய அளவிலான புத்தகமொன்றை, பாரிஸில் நடந்த ஏலத்தில் லண்டன் அருங்காட்சியகம் மிகப்பெரும் விலை கொடுத்து வாங்கியுள்ளது.

கிளாசிக் என்று போற்றப்படும்நாவல்களை ஆங்கிலத்தில் எழுதியவர் சார்லட் பிராண்டே. இவர், தன் 14ஆவது வயதில் எழுதிய, மிகச்சிறிய கையெழுத்துப் பிரதியொன்று பாரிஸில் வைக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் லண்டன் அருங்காட்சியகம் இதனை இலங்கைப் பணப் பெறுமதியில் சுமார் 15 கோடி அளவுக்குப் பணம் கொடுத்து வாங்கியது. வெஸ்ட்யார்க்ஷயரில் உள்ள சார்லட்டின் வீட்டில் இது வைக்கப்படவிருக்கிறது.

காலைக்கதிர் Kalaikathir



# துட்டகைமுனு எனும் கோட்டாபய ஆகிய நான்...!

- செங்கையான் -


நன்றி :- பதிவு இணையம்

**ருவான் வெலிசாய...!**

ஒட்டுமொத்த இலங்கையின் இலங்கையரின் கவனத்தையும் திங்களன்று தன் பக்கம் ஈர்த்துக் கொண்ட இடம். ஆம்...! மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம்மிக்க ஏழாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இங்குதான்

**பதவிப் பிரமாணம் செய்தார்.**

ஜனாதிபதியாகப் பதவியேற்பவர் தனக்குப் பிடித்தமான இடத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள முடியும். அதில் தவறு ஏதும் இல்லை. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ ருவான் வெலிசாயவில் பதவி ஏற்றுக்கொண்டமைக்குப் பின்னால், ஓர் ஆழமான வரலாற்றுக் காரணம் உள்ளது. இதை அவருடைய முதல்பேச்சும் ஆழமாக உணர்த்திச் சென்றுள்ளது.

அவரின் இந்த வியாக்கியானங்களை நாம் விளங்கிக் கொள்ள – கோட்டாபய சொல்லும் வரலாற்றுச் செய்தியை உணர – நாம் இரண்டாயிரம் ஆண்டுகள் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும்.

நம் கண்முன்,ஒரு சிறுவன் பஞ்சணையில் படுத்திருக்கிறான். ராஜ களை ததும்பும் அவன் முகம் சோகத்திலும் கோபத்திலும் சிவந்து கிடக்கிறது. கைகளையும் கால்களையும் குறுக்கிக் கிடக்கிறான். அவனின் தாய் அவனைத் தேற் றிக் கொண்டே கேட்கிறாள்.

“காமினி ஏன் இவ்வாறு கஷ்டப்பட்டுப் படுத்திருக்கிறாய்...! கை, கால்களை நீட்டித் தாராளமாகப் படுத்துக்கொள்!” என்கிறாள் தாய்.

கோபத்தில் எள்ளும்கொள்ளுமாய் வெடித்த மகன் சொல்கிறான், “மகா கங்கைக்கு அப்பால் (வடக்கே) தமிழர்கள். கீழே (தெற்கே) சமுத்திரம். கை, கால்களை நீட்டி தாராளமாக நான் படுப்பது எங்ஙனம்...?”

இவ்வாறு கேட்பவனுக்கு என்ன பதில் சொல்வது? தேற்றுவதுதான் எப்படி? ஏனெனில் அவனுள் இந்தக் குரோதமும் விரோதமும் வளரக் காரணமானவள் அவளல்லவா...? தன் மசக்கை ஆசை



களில் ஒன்றாக தமிழ் (எல்லாளனின்) தளபதி ஒருவனின் தலையை வெட்டிய குருதி படிந்த வாளைக் கழுவி, அந்த இரத்த நீரை குடிக்கக் கேட்டவள் அல்லவா அவள்...? அவளுக்குப் பிறந்தவளின் – அவள் அதைக் குடிக்கும்போது கருவில் இருந்த பிள்ளைக்கு – தமிழனை விரோதிக்கவும் பகைக்கவும் சொல்லித்தான் கொடுக்க வேண்டுமா... என்ன?

நீங்கள் நினைப்பது சரிதான்... அந்தச் சிறுவன் வேறு யாருமல்லன். மகாவம்சம் கூறும் இலங்கை வரலாற்றின கதாநாயகன் சிங்கள பௌத்தர்கள் இன்றும் – என்றும் – போற்றிப் புகழும் வீரநாயகன் துட்ட கைமுனு அல்லது துட்ட காமினி என அறியப்பட்ட காமினிஅபயதான். நீதி நெறி வழுவாத மன்னவன் – எதிரிகளும் எதிர்நிற்க அஞ்சும் – வீரனான எல்லாளனை சூழ்ச்சியால் வெற்றி கொன்றானே அதே வீர(?)நாயகன் துட்ட கைமுனுதான். பல இட்டுக்கட்டிய கதைகளைச் சொல்லும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இனவாதத் தீயை முதலில் பற்ற வைத்த மகாவம்சம் நூலின் நாயகன்தான்.

அந்தத் துட்டகைமுனு, சூழ்ச்சியால் எல்லாளனை போரில் வென்ற பின்னர், தனது வெற்றியைப் பறைசாற்றவும் பௌத்த மதத்தின் மீது தான் கொண்ட பற்றை வெளிப்படுத்தவும் அமைத்தது தான் ருவான் வெலிசாய.

இந்த விகாரையை துட்டகைமுனு கட்டியபோது, நவரத்தினங்களையும் தங்கக் கட்டிகளையும், வெள்ளிக்கட்டிகளையும் கொட்டிக் கட்டினான் என்கிறது மகாவம்சம். ஆனால், சூழ்ச்சியாலும் சதியாலும் வென்ற போரில் சூறையாடப்பட்ட தமிழர்களின் சொத்துக்களையும், அவர்களைக் கசக்கிப் பிழிந்து பெற்ற வரிகளை வசூலித்தும், போர் கைதிகளாகப் பிடிபட்ட தமிழர்களை அடிமைகளாக்கி அவர்களைத் துன்புறுத்தி வருத்தி, அவர்கள் சிந்திய இரத்தத்திலும் வியர்வையிலும் கட்டப்பட்டது தான் இந்த விகாரை.

தமிழர்களை வெற்றி கொண்டதன் அடையாளச் சின்னமாக – அன்றைய போரில் சூழ்ச்சியால் கொல்லப்பட்ட பல ஆயிரம் தமிழர்களின் நினைவுச் சின்னமாக – பல்வேறு துன்பங்களையும் சித்திரவதைகளையும் அடக்குமுறைகளையும் தமிழர்கள் எதிர்கொண்டதற்கான சாட்சியமாகவும் நிமிர்ந்து நின்றதுதான் இந்த ருவான் வெலிசாய. இவ்வாறு தமிழின அழிப்பின் – தமிழர்கள் மீதான அடக்குமுறையின் – அடையாளமாக நிற்கும் ருவான் வெலிசாயவில்தான் கோட்டாபயவின் அரசியல் பயணம் தொடங்கியது.

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய இனவழிப்பை – உலகமே வர்ணிக்கும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பை – வழிநடத்தியவர்களில் ஒருவர்தான் இந்த கோட்டாபய ராஜபக்ஷ. 2005 இல் தமிழ் மக்கள் வாக்களிப்பைப் புறக்கணித்தபோது சிங்கள, பௌத்த தீவிர சக்திகளின் தெரிவாக இருந்தவர் இவருடைய மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ. இவர், பதவியேற்றதும் இலங்கை வந்த முன்னாள் இராணுவத்திரான கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவியேற்றார். தமிழர்களுக்கு எதிரான போரை தனது சகோதரனின் நிறைவேற்று அதிகார ஆசியுடன் முன்னின்று நடத்தினார். இராணுவத் தளபதிகள் குற்றங்கள் இழைக்கவும் அவர்கள் கட்டுக்கடங்காத போர் மீறல்களை மேற்கொள்ளவும் சர்வதேச போர் விதிகளை காலில் போட்டு மிதித்து தமிழர்களுக்கு எதிராக அழிப்பைக் கட்டவிழ்த்து விட்டார்.

தமிழரின் தாயகத்தை – தமிழருக்கே உரித்தான அரசை – மீளக் கேட்ட அமைக்க முயன்ற விடுதலைப் புலிகள் அமைப்பு மௌனிக்கச் செய்யப்பட்டது. சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் இந்தப் போரில் கொல்லப்பட்டார்கள். மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். அங்கு பல இன்னல்களையும் அடக்குமுறைகளையும் எதிர்கொண்டார்கள் தமிழ் மக்கள். இவ்வாறுதமிழர்களைவெற்றிகொண்ட ராஜபக்ஷ சகோதரர்களில் ஆட்சியாளரான மஹிந்த ராஜபக்ஷ 2010 தேர்தலில் போட்டியிட்டபோது, இலங்கையை முதன்முதலில் ஒருங்கிணைத்த தமிழர்களை அழித்து அடக்கிய துட்டகைமுனு மன்னனுக்கு நிகராகக் கொண்டாடப்பட்டார்; போற்றப்பட்டார்.

2015 ஜனாதிபதி தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார். ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சிக்கு தடை ஏற்பட்டது. எனவே 2019 தேர்தலில் அவர்களுக்குப் பெருவெற்றி ஒன்று தேவைப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையைப் பறிகொடுத்த அவர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கினார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அப்போதைய தலைவர் பண்டாரநாயக்க என்ன நோக்கில் தொடங்கினாரோ அதே இலட்சியப் பாதையில்,அதே சிந்தனையை முன்வைத்தே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் தொடங்கப்பட்டது. சிங்கள,பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்த நாட்டில் ஆட்சிப்பீடம் ஏற அவர்களின் ஆசி மட்டுமே போதும் என்பதை மீண்டும் பறை சாற்றியது கோட்டாபயவின் வெற்றி.


துட்டகைமுனுவின் ஊரான திஸ்ஸமகரகமவை (அம்பாந்தோட்டை) சேர்ந்த கோட்டாபயவும், தனது அண்ணன் வழியிலேயே, சிங்கள பௌத்தர்கள் போற்றும் நவீன துட்டகைமுனுவான கோட்டாபய ராஜபக்ச, துட்டகைமுனு மன்னன் தமிழர்களை வெற்றி கொண்டு அவர்களிடம் இருந்து கைப்பற்றிய செல்வங்களைக் கொண்டு கட்டிய விகாரையான ருவான் வெலிசாயவில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றார். அங்கேயே பதவிப் பிரமாணத்தையும் செய்து சிங்கள. பௌத்தன் என்ற பெருமிதத்துடன் நவீன துட்டகைமுனுவாக தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் வகை தொகையின்றி தமிழர்கள் அழிக்கப்பட, தமிழர்களை அழித்தும் வருத்தியும் பெறப்பட்ட செல்வங்களைக் கொண்டு கட்டப்பட்ட ருவான் வெலிசாயவில், கோட்டாபய எனும் நான் இந்த நாட்டின் சகல மக்களையும் இன, மத, சாதி பேதமின்றி அனைவருக்கும் சேவையாற்றுவேன் எனக் கூறி உறுதி ஏற்றிருக்கிறார்.

லட்சக்கணக்கானதமிழர்களைக்கொன்றொழித்து விட்டேனே என துட்டகைமுனு கலங்கியபோது, நமது மார்க்கத்தை நம்பாதவர்கள் தீய வாழ்வை மேற்கொண்டவர்கள், மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்படக்கூடாதவர்கள் என உபதேசமளித்தனர் பிக்குகள். இதனால் துட்டகைமுனு மனம் மாறினான் என்கிறது மகாவம்சம்.

நவீன துட்டகைமுனுவான கோட்டபய ராஜபக்ஷவும் இதைப் பின்பற்றி துட்டகைமுனுவாகவே வாழ்வாரா? அல்லது கோட்டாபய என்ற சிங்கள, பௌத்த ஆதிக்கராக சிறுபான்மை மக்களின் மனதில் இருக்கும் விம்பத்தை அழித்து முன்மாதிரியான தலைவராக மாறுவாரா?

**இனிவரும் காலங்கள்தான் இதற்குப் பதில் சொல்லும்.**



# 5ஆவது முறை பிரதமர் பதவியை பாதியிலேயே இழக்கிறார் ரணில்!

கொழும்பு, நவ. 21
அரசியல் வரலாற்றில் 5 தடவைகள் பிரதமராக இருந்து இடைநடுவே பதவியை இழந்தார் என்ற சாதனையை ரணில் விக்கிரமசிங்க இன்று பதிவு செய்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க 5ஆவது முறையாக தனது பிரதமர் பதவியை 5 ஆண்டுகள் முழுமையாக நிறைவு செய்யாமல் இடை விலகுகிறார்.

1993ஆம் ஆண்டு ஒரு வருடமும் 2002ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை இரண்டு வருடங்களும் 2015ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கும் ஓகஸ்ட்வரை இடைக்கால அரசின் பிரதமர் மற்றும் 2015 ஓகஸ்ட் தொடக்கம் 2018ஆம் ஒக்ரோபர் வரை சுமார் 3 வருடங்களும் என தனது பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க இழந்திருந்தார்.



தற்போது 2018 டிசெம்பர் நடுப்பகுதியில் மீளவும் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, ஒரு வருடம் நிறைவடைவதற்கு முன்பாக இன்று நவம்பர் 20ஆம் திகதி பதவியைத் துறக்கிறார்.

1993ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொலை செய்யப்பட்டதையடுத்து விஜேதுங்க புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். எனினும் ஒரு வருடத்தில் பிரதமர் பதவியையிழந்து தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைக் கண்டது. சந்திரிக்க பண்டாரநாயக்க பிரதமரானார்.

தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். எனினும் அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்க குமாரதுங்க, 2014ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசைக் கலைத்தார். அடுத்து ரணிலின் பதவிக்காலம் முடிவடைந்தது. 2004 ஆண்டில் புதிய பொதுத் தேர்தல் இடம்பெற்றது.

அத்துடன், 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தேர்தலில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதும் மூன்றாவது முறையாக நாட்டின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் 17இல் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னிலை பெற்ற போதும் பெரும்பான்மை இல்லாமையால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து அரசமைத்தது. அதில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். அது அவரது நான்காவது பிரதமர் பதவிக்காலமாகும்

எனினும் 3 ஆண்டுகளில் 2018 ஒக்ரோபர் 26 அரசியல் புரட்சியில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியையிழந்தார். மீளவும் 51 நாள்களின் பின்னர் 5ஆவது முறையாக ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். (ஐ)

# அரசியலில் இருந்து ஒதுங்க சஜித் முடிவு?



கொழும்பு, நவ. 21
ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சிலர் மேற்கொண்ட சதிகளாலேயே ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வி கண்டார் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின் போது சஜித் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் தனக்கு மிகவும் நெருக்கமான அரசியல்வாதிகளை அழைத்து, மூடிய அறைக்குள் இந்தச் சந்திப்பை அவர் நடத்தியிருந்தார்.

52 வயதான நான் நாட்டுக்குச் சிறந்ததைக் கொடுக்கவே முயன்றேன். நான் சிறந்த பௌத்தன் எனினும் பௌத்தர்கள் எனக்கு அதிகளவில் வாக்களிக்காது விட்டு விட்டனர். தேர்தல் பிரசாரக் காலத்தில் நான் சகலரையும் நம்பினேன். எனது கட்சியின் தலைமை எனக்குத் துரோகம் செய்தது. எனக்கு உரிய பணத்தை கட்சி வழங்கவில்லை. நான் தற்போது கடனாளியாகியுள்ளேன். தேர்தல் பிரசாரத்திற்கு பணமின்மையால் நெருக்கடிகளை எதிர்கொண்டேன்.

எனக்கு துரோகம் செய்யப்பட்டுள்ளதாக உணர்கிறேன். சிலர் பாம்புகளை போல செயற்பட்டனர். இந்த 2 தரப்பினரும் எனது தோல்விக்கு வழிவகுத்தனர்.

எங்கள் அணியில் இருந்த சிலர், அமெரிக்காவுடன் மிலேனியம் ஒப்பந்தத்தைச் செய்ய ஆசைப்பட்டனர். இன்னும் சிலர் பௌத்தத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

என்னையும் எனது குடும்பத்தினரையும் முழுமையாக அர்ப்பணித்தே இந்தப் பயணத்தில் இறங்கினேன். நான் அமைச்சராக இருந்தபோது எனக்கென ஒரு வீட்டைக்கூடக் கட்டிக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட நிலையில் நான் தோல்வியடைய வேண்டுமென, கட்சிக்குள் சிலர் விரும்பினர். எனினும் பலர் நான் வெற்றியடைய வேண்டுமென ஆசைப்பட்டனர்.

தற்போது புதிய கட்சி ஆரம்பிக்கும் எந்த நோக்கமும் எனக்கு இல்லை. அதற்காக ரணிலுடன் தலைமைப் பதவிக்காக சண்டையிடிக்கவும் மாட்டேன்.

கட்சியினர் பேசி ஒரு தீர்மானத்திற்கு வரட்டும். அதுவரை நான் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க தீர்மானித்துள்ளேன் என்று சஜித் கூறியுள்ளார் என அந்த ஊடகம் கூறியுள்ளது. (ஐ)

# 12 ஆயிரம் கார்ட்போர்ட் வாக்குப்பெட்டிகள் கதி?



கொழும்பு, நவ. 21
ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட 12 ஆயிரம் காட்போர்ட் வாக்குப் பெட்டிகள் அழிக்கப்படவுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, அதற்காகப் பயன்படுத்தப்பட்ட காட்போர்ட் பெட்டிகளைத் தங்களிடம் கையளிக்குமாறு பல்வேறு அரச அமைப்புகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

எனினும் அந்த வாக்குப் பெட்டிகளை அழிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# நான் பயணிக்கும் போது வீதித் தடை வேண்டாம்!

## பாதுகாப்புப் பிரிவுக்கு கோட்டா பணிப்பு

கொழும்பு, நவ. 21
தான் பயணம் செய்து போது வாகனத் தொடரணிக்காக வீதிகளை மறித்து பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தவேண்டாம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புப் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், தனது பயணங்களின்போது 3 வாகனங்களுக்கு மேல் பயன்படுத்தவேண்டாம் என்றும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் தற்போது ஆயிரத்து 200 பேர் பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை 200 பேராகக் குறைக்குமாறு கோட்டாபய அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பதவியேற்றபோது இவ்வாறே கட்டளைகளைப் பிறப்பித்திருந்தார். எனினும் அவரது உயிருக்கு ஆபத்து என எச்சரித்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, சில மாதங்களிலேயே பாதுகாப்பை அதிகரித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# மீண்டும் வெளிநாட்டில் குடியேறுகிறார் சந்திரிகா



கொழும்பு, நவ. 21
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் வெளிநாட்டில் குடியேறுவதற்குத் தயாராகி வருகிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். எனினும் சஜித்தின் தோல்வியின் பின்னர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதாக அவர் பகிரங்கமாக குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் அவர் வெளிநாடு செல்லத் தீர்மானித்தமையால், அவரால் வழி நடத்தப்படுகின்ற அபேசிறிலங்கா அமைப்பிற்கு தற்போது பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஐ)

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# நியூசிலாந்தை வீழ்த்துமா இங்கிலாந்து?



நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரானது, மௌன்ட் மகட்டரேயில், இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 3.30மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்குள் இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடர் உள்ளடங்காத நிலையில் அழுத்தம் குறைந்ததாகக் காணப்படுகின்றபோதும், சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்படுகிறது.

தரவரிசையில் தற்போது மூன்றாமிடத்திலிருக்கும் இங்கிலாந்து, இத்தொடரை வெல்லும் பட்சத்தில், இரண்டாமிடத்திலுள்ள நியூசிலாந்தை மூன்றாமிடத்துக்கு பின்தள்ளி இரண்டாமிடத்துக்கு முன்னேற முடியும். மாறாக, இத்தொடரை 0 –2 என நியூசிலாந்திடம் இங்கிலாந்து இழந்தால் நான்காமிடத்துக்கு கீழிறங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்தைப் பொறுத்தவரையில் அணித்தலைவர் கேன் வில்லியம்சனின் தலைமையில், றொஸ் டெய்லர், டொம் லேதம், பி.ஜெ வட்லிங், ஹென்றி நிக்கொல்ஸ் ஆகியோர் துடுப்பாட்டத் தூண்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் உறுதியான பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்குவார்கள் என்று நியூசிலாந்துத் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

பந்துவீச்சுப் பக்கம் பார்க்கும்போது, முதலாவது டெஸ்டுக்கான ஆடுகளமானது ஆரம்ப நாளின் மதிய நேர இடைவேளையைத் தொடர்ந்து தட்டையானதாகவே இருக்கும் எனக் கருதப்படுகையில், கட்டுக்கோப்பாக பந்துவீசக்கூடிய மிற்செல் சான்டெனரை ஏழாமிடத்தில் கொண்டு, ட்ரெண்ட் போல்ட், டிம் சௌத்தியுடன் அச்சுறுத்தலாக பந்துவீசக்கூடிய நீல் வக்னருடன்,



அவரைப் போன்ற வலதுகை பந்துவீச்சாளரான லொக்கி பெர்கியூசனுக்கு அறிமுகத்தை நியூசிலாந்து வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் அவர்களின் பிரதான ஆயுதமாக ஜொவ்ரா ஆர்ச்சரே இருப்பார் என்ற நிலையில், அவருடன் ஸ்டுவர்ட் ப்ரோட்டும், கட்டுக்கோப்பை வழங்கக்கூடிய ஜேக் லீச்சும் விளையாடுவது உறுதியாகவுள்ள நிலையில், அடுத்த பந்துவீச்சாளராக பயிற்சிப் போட்டிகளின்படி சாம் கர்ரனே விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், அனுபவமிக்க கிறிஸ் வோக்ஸை விட சாம் கர்ரன் சிறந்தவரா என கேள்விகள் எழாமலில்லை.

இந்நிலையில்,துடுப்பாட்டப்பக்கம்றோறிபேர்ண்ஸுடன் இணைந்து ஆரம்பத் துடுப்பாட்டவீரராக டொம் சிப்லி களமிறங்கி சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளார். தவிர, தனது பழைய நான்காமிடத்துக்கே இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ றூட் செல்கின்ற நிலையில் மூன்றாமிடத்தில் ஜோ டென்லி களமிறங்கவுள்ளமையுடன், ஆறாமிடத்தில் ஒலி போப் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# காதத் ஹுசைனுக்கு ஐந்து ஆண்டுகள் தடை!

சக வீரரை அடித்த வேகப்பந்து வீச்சாளர் காதத் ஹுசைனுக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஐந்து ஆண்டுகள் தடை விதித்துள்ளது.

தேசிய கிரிக்கெட் லீக் போட்டிகள் தற்போது பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றன.

இதில் டாக்கா மண்டலம் – குல்னா மண்டலம் அணிகள் இடையிலான ஆட்டம் குல்னாவில் நடைபெற்று வருகிறது.

இதில் டாக்கா மண்டல அணிக்காக விளையாடி வரும் பங்களாதேஷ் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் காதத் ஹுசைன், சக வீரர் அராபத் சன்னியை கோபத்தில் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.



தனது பந்து வீச்சு திறமை குறித்து அராபத் சன்னி குறை கூறியதால் ஏற்பட்ட ஆத்திரத்தில் அவர் தாக்கினார் எனக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் பற்றிய முறைப்பாடு கிடைத்ததும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை காதத் ஹுசைனை உடனடியாகப் போட்டியில் இருந்து இடை நீக்கம் செய்தது.

பின்னர்விசாரணைகளைஅடுத்து காதத் ஹுசைனுக்கு ஐந்து ஆண்டு தடை மற்றும் 1200 அமெரிக்க டொலர்கள் அளவில் அபராதமும் விதிக்கப்பட்டது. இரண்டு வருடம் போட்டிகளில் இருந்து இடைநீக்கப்பட்டுள்ளார்.

33 வயதான காதத் ஹுசைன் பங்களாதேஷ் அணிக்காக 38 டெஸ்ட், 51 ஒருநாள் மற்றும் 6 இருபது ஓவர் போட்டியில் விளையாடியுள்ளார்.

இவர் கடந்த 2015 ஆம் ஆண்டு மைதானத்தில் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் கீழ் தடைக்கு உள்ளானார். அதன் பின்னர், சர்வதேச போட்டிகள் எதிலும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸ்திரேலியாவுக்கு சவாலளிக்குமா பாக்.?

ஆஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்டானது, பிறிஸ்பேணில் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 5.30 மணிக்கு



ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் 2 போட்டிகளைக்கொண்ட இந்த டெஸ்ட் தொடர் உள்ளடங்குகையில் இப்போட்டி முக்கியத்துவம் பெறுகிறது.

தமது சொந்த மண்ணில் ஏனைய அணிகளைப் போன்று பலமானதாகவே ஆஸ்திரேலியா காணப்படுகின்றபோதும், அதிகம் பந்துகள் எழும்பி வரக்கூடிய பிறிஸ்பேர்ண் ஆடுகளத்தில் இம்ரான் கான், மொஹமட் அப்பாஸ் ஆகிய சிரேஷ்ட வேகப்பந்து வீச்சாளர்களையும், கீன் ார் அஃப்ரிடி, நசீம் ா, முஹமட் மூஸா ஆகிய இளம் வேகப்பந்துவீச்சாளர்களையும் கொண்ட பாகிஸ்தானின் பந்துவீச்சு வரிசையானது நிச்சயமாக ஆஸ்திரேலிய துடுப்பாட்டவீரர்களுக்கு சவாலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலும் இம்ரான் கான், மொஹமட் அப்பாஸ், யசீர் ாவுடன் இளம் பந்துவீச்சாளர்களில் நசீம் ஷா இப்போட்டியில் களமிறங்குவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரையில் அசாட் ஃபிக், பாபர் அஸாம் ஆகியோர் நம்பிக்கை நட்சத்திரவீரர்களாக காணப்படுகின்ற நிலையில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அணித்தலைவர் அஸார் அலியும் பிரகாசித்தாலே சவால் மிக்க ஓட்ட எண்ணிக்கைகளை பாகிஸ்தான் பெற்றுக் கொள்ள முடியும்.

மறுப்பக்கமாக ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில், அவ்வணியின் பந்துவீச்சு வரிசையானது பற் கமின்ஸ், ஜொஷ் ஹேசில்வூட், மிற்செல் ஸ்டார்க், நேதன்லையன்எனஉறுதியாகவிருக்கின்ற நிலையில் துடுப்பாட்டப் பக்கத்திலேயே மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

டேவிட் வோணருடன் ஆரம்பத் துடுப்பாட்டவீரராக ஜோ பேர்ண்ஸ் களமிறங்கவுள்ளவேளை, மத்திய வரிசையில் ட்ரெவிஸ் ஹெட் மீண்டும் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில், குழாமுக்குள் கமரொன் பான்குறொப்ட், வெளியே குட்டிஸ் பட்டர்சன் ஆகியோர் காணப்படுகின்ற வேளையில், ஜோ பேர்ண்ஸும், ட்ரெவிஸ் ஹெட்டும் ஓட்டங்களைப் பெறவேண்டிய அழுத்தத்தில் காணப்படுகின்றனர்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் ஐந்தாமிடத்தில் ஆஸ்திரேலியாவும், ஏழாமிடத்தில் பாகிஸ்தான் காணப்படுகின்ற நிலையில், இத்தொடரின் எந்த முடிவும் பாகிஸ்தானின் தரநிலையைப் பாதிக்காது.

மறுபக்கமாக, பாகிஸ்தானை 2 – 0 என வென்றால், நான்காமிடத்திலுள்ள தென்னாபிரிக்காவை ஐந்தாமிடத்துக்கு பின்தள்ளி நான்காமிடத்துக்கு ஆஸ்திரேலியா முன்னேறும். தவிர, 0 – 2 என பாகிஸ்தானிடம் தோற்றால், ஆறாமிடத்துக்கு ஆஸ்திரேலியா கீழிறங்க, ஆறாமிடத்திலுள்ள இலங்கை, ஐந்தாமிடத்துக்கு முன்னேறும்.



# பும்ரா – போல்ட் கூட்டணி மிகவும் அபாயகரமானது

ஜஸ்பிரிட் பும்ரா மற்றும் ட்ரென்ட் போல்ட் ஜோடி எதிர்வரும் தொடரில் அபாயகரமான கூட்டணியாக இருக்கும் என மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். ரி – 20 தொடருக்கான தயார்படுத்தல்கள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மும்பை இந்தியன்ஸ் அணி, அண்மையில் 10 வீரர்களை விடுவித்தது. இதற்கு பதிலாக டில்லி மற்றும் ராஜஸ்தான் அணிகளைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர்களான ட்ரெண்ட் போல்ட் மற்றும் தவல் குல்கர்ணியை தேர்வு செய்தது.

இந்த நிலையின் இவர்களின் தேர்வு குறித்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் மஹேல ஜயவர்தன கூறுகையில், ஜேசன் பெரெண்டர்ப் அணியில் வைத்து எப்படி செயற்படுத்துவது என்பது எங்களுக்கு மிகப்பெரிய கவலையாக இருந்தது. அவருக்குப் பதிலாக மாற்று வீரரை தேட வேண்டியிருந்தது. கடந்த முறை எங்க ளுக்காக பெரெண்டர்ப் சிறப்பாக விளையாடியிருந்தார்.

டில்லி அணி ட்ரெண்ட் போல்ட்யை விடுவிக்கின்றது என்ற செய்தி வந்தபோது, அவர் உலகத்தரம் வாய்ந்த வீரர் என நாங்கள் உணர்ந்தோம். பும்ரா உடன் இணைந்து அவர் பந்து வீசினால், இந்த ஜோடி மிகவும் அபாய கரமானது எனக் கூறினார்.

முதுகு வலி காரணமாக சமீபகாலமாக அவதிப்பட்டு வந்த சகலதுறை வீரர் ஹர்திக் பாண்டியாவுக்குக் கடந்த மாதம் லண்டனில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. பும்ராவுக்கு அவரது கழுத்தின் கீழ்பகுதியில் முறிவு இருந்தது. இதனால் அவர் சிகிச்சை மேற்



# கோட்டாவை எதிர்ப்பேன்!

## குமார வெல்கம விடாப்பிடி

கொழும்பு, நவ. 21

நாட்டு மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளமையை மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து ஏற்றுக் கொள்கின்றபோதிலும், அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருக்கின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் நான் அவர் மீது வெளியிட்ட அதிருப்தி நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. என்னுடைய அந்த முடிவில் நான் உறுதியாக இருக்கின்றேன். இதற்கான காரணங்கள் ஏற்கனவே பல முறை என்னால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை நன்கு அவதானித்து எமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடரும்.

அரசமைப்பின் படி அடுத்த வருடம் மார்ச் மாதம் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அது குறித்து எமது நிலைப்பாடு என்று எதுவும் இல்லை. எனினும் அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதென்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும்.



2020 மார்ச் மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு மூன்றில் பெரும்பான்மை கோரப்பட்டால் அதற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்தே தீர்மானிக்க முடியும் – என்றார். (ஐ)

## வெடிமருந்துடன் ஒருவர் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு, நவ. 21

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பகுதியில் 53 கிலோகிராம் வெடிமருந்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில், அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 53 கிலோ கோர்டைட் ரக குறைந்த சக்தியுடைய வெடிமருந்து மீட்கப்பட்டது.

சந்தேகநபர் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாரென விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

## பாணின் விலை அதிகரிப்பு



பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 450 கிராம் பாணின் விலை நள்ளிரவு முதல் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இதனை தெரிவித்துள்ளது. (ஐ)

## பதவி துறந்தார் சந்திரிகா



*கொழும்பு, நவ. 21*

*தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணியகத்தின் தலைவர் பதவியிலிருந்து, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விலகியுள்ளார்.*

*கடந்த 2015 ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் எண்ணக்கருவுக்கு அமைய உருவாக்கப்பட்ட இந்தப் பணியகத்தின்ஊடாகவடக்கு, கிழக்கு உட்பட பல பிரதேசங்களில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.*

*இந்நிலையில் அந்தப் பணியாகத்தின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராஜினாமா செய்துள்ளார்.*

## நளின் பண்டாரவின் குற்றச்சாட்டை நேற்று நிராகரித்தார் அகிலவிராஜ்

கொழும்பு, நவ. 21

புதிய ஜனநாயக முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கு முழுமையாக ஆதரவளிக்கவில்லை என்ற கூற்றை ஐக்கிய தேசிய கட்சி மறுத்துள்ளது.

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரசாரத்துக்கு ஐக்கிய தேசிய கட்சி முழுமையாக ஆதரவளிக்கத் தவறிவிட்டதாக நளின் பண்டார நேற்று முன் தினம் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்றுக் கருத்து தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம், இந்த குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாக தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கான நடவடிக்கைகள் அனைத்தும் கொழும்பை மையமாக கொண்டு அமைக்கப்பட்ட அலுவலகம் ஊடாக இடம்பெற்றது என்றும் அவர் கூறினார்.

அந்த தேர்தல் பிரசார அலுவலகத்துக்குத் தேவையான அனைத்து ஆதரவும் சிறிகொத்தாவில் உள்ள கட்சியின் தலைமையகத்தால் வழங்கப்பட்டது என்றும் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (ஐ)

## கடற்படைத் தளபதியை சந்தித்தார் ஜனாதிபதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் இடம்பெற்ற முதல் உத்தியோகபூர்வச் சந்திப்பு இதுவாகும்.

கடற்படைத் தளபதி புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தார் . இந்தச் சந்திப்பின்போது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா புதிய ஜனாதிபதிக்கு நினைவுப்பரிசு ஒன்றை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஊழல், மோசடிகளில்லாத அரசு உருவாக வேண்டும்

### கோருகின்றார் வாசுதேவ


கொழும்பு, நவ. 21

திறமையான ஆளுமை மற்றும் ஊழல் மோசடிகள் அற்ற ஒரு அரசை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொது மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்துச் சலுகைகளும் உடனடியாக வழங்கப்படவேண்டும் எனவும், தேசிய அமைதிக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு உடன்படிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)






வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# இனவாதத்தை முன்நிறுத்தி தொடர்ந்தும் ஆட்சியொன்றை முன்னெடுக்க முடியாது

## மனு நாணயக்கார கூறுகிறார்



கொழும்பு, நவ. 21

நாட்டில் சிங்கள – பௌத்தத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக எதிரணியினரால் மாயை ஒன்று உருவாக்கப்பட்டு, அதனூடாக அவர்கள் தேர்தலில் வெற்றியடைந்திருக்கிறார்கள்.

ஆனால் இனவாதத்தை முன்நிறுத்தி நாட்டில் தொடர்ந்தும் சிறந்த ஆட்சியொன்றை முன்னெடுக்க முடியாது என்பதை நினைவில்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவின் இல்லத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

# கோட்டாவுக்கு விடுத்துள்ள அழைப்பை இந்திய அரசு திரும்பப் பெறவேண்டும்!

## திருமாவளவன் கோரிக்கை

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுத்துள்ள அழைப்பை இந்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில் –

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். அவரை இந்தியாவுக்கு வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அதை ஏற்று அவர் 29ஆம் திகதி டெல்லி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய அரசு தனது அழைப்பை திரும்பப்பெறவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வலியுறுத்துகிறோம்.

தமிழ் மக்களின் உணர்வுகளைப்புரிந்துகொண்டுகோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுத்துள்ள அழைப்பை இந்திய அரசு திரும்பப்பெறவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இந்த கோரிக்கையை வலியுறுத்திச் சென்னையில் 23ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்க வேண்டும் – என்றார். (ஐ)

# நவ சிங்கள ராவயவும் விரைவில் கலையுமாம்

கொழும்பு, நவ. 21

நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து நவ சிங்கள ராவய அமைப்பைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசர்களுக்கு பின்னர் நாட்டுக்குச் சிறந்த தலைவர் ஒருவர் கிடைத்துள்ள காரணத்தால் இனிமேல் தேசத்தைப் பாதுகாக்க தேசிய அமைப்புகள் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கூடிய விரைவில் புதிய நாடாளுமன்றத்தை அமைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்குமாறும் ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சித் தலைவரிடம் வேண்டிக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் தங்களது குழுவிலும் குற்றவாளிகள் இருப்பின் அவர்களுக்கும் தண்டனை வழங்குமாறும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

# தலதா மாளிகைக்குச் சென்று கோட்டாபய நேற்று வழிபாடு

கொழும்பு, நவ. 21

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்றுத் தலதா மாளிகைக்குச் சென்று விசேட மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நேற்று முற்பகல் 10.20 மணியளவில் தலதா மாளிகைக்கு சென்ற புதிய ஜனாதிபதியைக் காண, நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். மக்களின் கோஷங்களுக்கு மத்தியிலும் செங்களம்பள வரவேற்புக்கு மத்தியிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலதா மாளிகைக்குச் சென்றார்.

இதன்போது, இவருக்குச் சம்பிரதாயபூர்வமான வரவேற்பும் வழங்கப்பட்டது. பின்னர் விசேட மதவழிபாடுகளில் ஈடுபட்ட அவர் நினைவுச் சின்னமொன்றையும் வழங்கினார். (ஐ)





# ஜனாதிபதியின் மற்றுமோர் அதிரடி உத்தரவு!

*கொழும்பு, நவ. 21*

*ஜனாதிபதி செயலணியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை 500 ஆக குறைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது செயலாளரான பி.பி. ஜெயசுந்தரவுக்கு உத்தரவிட்டுள்ளார்.*

*தற்போது ஜனாதிபதி செயலணியில் சுமார் 2500 பேர் வரை கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# ஹக்கீமுக்கோ ரிஷாத்துக்கோ புதிய அரசில் இடமில்லையாம்

கொழும்பு, நவ. 21

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் உருவாக்கப்படவுள்ள அரசில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கோ அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியூதீனுக்கோ வாய்ப்பளிக்கப் போவதில்லை என்று, ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, மேற்படி இருவருக்கும், தமது அரசில், எந்தவொரு அமைச்சுப் பதவியும் வழங்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

திருமலை, நவ. 21

திருகோணமலை சீனன் குடா – கலவல வீதி சமன்புர பிரதேசத்தில் நேற்று கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 170 கிராம் கேரள கஞ்சாவை தாம் கைப்பற்றினர் எனத் திருகோணமலை மாவட்ட பிராந்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சீனன் குடா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஐ)

# மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டும்



## சுப்ரமணியன் சுவாமி கோரிக்கை

புதுடில்லி, நவ. 21

இந்தியா - இலங்கைக்கு இடையிலான உறவு பலமாகவேண்டும் என்றால் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்கவேண்டும் என பா.ஜா.க.வின் மூத்த தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

டுவிட்டரில் இந்த விடயம் தொடர்பாக நேற்று பதிவிட்டுள்ள அவர், மஹிந்த ராஜபக்ஷவை இலங்கையின் பிரதமராக்கவேண்டும். இதனால் இலங்கை - இந்தியாவுடனான உறவு திடமானதாகவும், இரும்பு போன்றும் உறுதியாக இருக்கும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்றுள்ள நிலையில் முதலாவது அரச பயணமாக அவர் இந்தியா செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மரண அறிவித்தல்



## பசுபதி தங்கராணி

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரசடி வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட பசுபதி தங்கராணி கடந்த (18.11.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற வைத்தி – அன்னம் தம்பதிகளின் அன்பு மகளும், காலம்சென்ற மாணிக்கம் – ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், பசுபதியின் அன்பு மனைவி யும், சோபனா, சசிரேகா, பிரசாத், தர்சிகா, லோசனா ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகேஸ்வரன், நிரோஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அர்வின், ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலம்சென்ற கந்தையா, வள்ளியம்மை மற்றும் தறுமு, இராசகிளி, இரத்தினம், சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற தெய்வேந்திரம் மற் றும் நல்லம்மா, மலர், நேசமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**175, அரசடி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2019 இல் வெளியிடப்பெற்றது.